# கண்ணன்

1-7-58
13 ந.பை




OFFICE OF THE REGISTR
22 JUL 195
MAD
3/8
3-58
41

# கண்ணன் தபால்கள்

தங்கள் புகைப்படத்தைக் கண்ணனில் ஏன் வெளியிடுவதில்லை.
—பி. முருகப்பா, பீளமேடு, கோவை.

கண்ணனை நாற்பது பக்கங்களாகப் பதினைந்து நயாபைசா விலையில் வெளியிடுங்கள். —கே. எஸ். சீனிவாசன், சென்னை - 1
—எம்.எஸ். ராஜாராம், திருவாரூர்.

'தவிப்பு' மிகவும் நன்ருக இருந்தது.
—ச. பழனியப்பன், குமரப்பன், மேலைச் சிவபுரி.

கர்ர்ர்ர்... என்ற ஓசை அந்தக் கதையில் ஒரு டஜன் தடவை வருகிறது. நல்ல கற்பனை. தவிப்பு நல்ல கதை. ஈ. ஸ்ரீ யின் கதை நீதி புகட்டும் முறையில் அமைந்திருக்கிறது. காளிகோட்டை விறு விறு என்று செல்கிறது. கவர்னர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தொடர்ந்து படித்துவருகிறேன். —ச. கேசவன், கு. கழுகாசலபுரம்.

அட்டைப்படம் பிரமாதமாக இருக்கிறது. 'எல்லாம் அவனுல்' என்னும் கதை நன்ருகவும் பயனுடையதாகவும் இருந்தது. தொடர் கதைகள் விறுவிறுப்பாகச் செல்கின்றன. —கேயேயெம், கூத்தாநல்லூர்.

'எல்லாம் அவனுல்' பண்புமிக்க கற்பனை.
—குவின்மாறன், எழிஞ்சிக் குப்ப[illegible]

எழுத்தாளரின் அறிமுகப் பகுதி மகிழ்ச்சி தரும் பகுதி. அறிமுக படுத்தும் இதழிலேயே அவர்களுடைய கதையையும் வெளியிடுங்கள்.
—தெ. பா. சீதாராமன், சென்னை -

'காகம் கட்டுரைப் போட்டி' விளம்பரத்தில் தேதி மாற்றம் ஏ[illegible] என்பது புரியவில்லை. ஸி. ரங்கமணி, கும்பகோண[illegible]

ஐந்து வயது முதல் எட்டு வயது வரையில் உள்ளவர்கள[illegible] எப்படிப் போட்டியில் கலந்துகொள்ள முடியும்?
—டி. வி. விசுவநாதன், குடந்தை.

அந்த வயதினர் எவ்வளவு தூரம் தம் குழந்தை உள்ளத்தை வெளிப் படுத்த முடிகிறது என்பதை அறியவே இந்த வாய்ப்பு. (ஆ-ர்.)

மைசூர்ச் சந்தனத்தைப் போல மைசூர் கவர்னரின் வாழ்க்கை பரிமளிக்கிறது. 'விநாயகர் வழிபாடு'ம், 'தவிப்பு'ம் நல்ல கதைகள் 'கர்-கர்ர்' என்ற கதையும் 'எல்லாம் அவனுல்' என்பதும் நல்ல கற்பனைகள். —கிருஷ்ண பலராமன், நாட்டரசன் கோட்டை

'தவிப்பை'ப் படிக்கும்போது நம் உள்ளமெல்லாம் ஒரு தவிப்பை உணர்கிறது. என்ன ஆகுமோ என்று பெரும் தவிப்பாக இருக்கிறது.
—ஆர் சீனிவாசன், அக்கியம்பட்டி

கண்ணன் தாமதமின்றி வந்தால் மகிழ்ச்சியாக இருக்கும் நாலந்தா கல்லூரியைப்பற்றிக் குறிப்பு எழுதுவீர்களா?
—வி. ஆர். சுந்தரராஜன், புனு - 2

'தவிப்பு' வெகுஜோர்! ஜனுவின் தொடர்கதை மிகப் பிரமாதம்.
—எஸ். பலராமன், சென்னை 21

அட்டைப் படம் அற்புதம். —கே. வெங்கடேசன், அன்னியூர்.

தொடர் கதைகளில் தொடரும் ஏன் போடுகிறீர்கள்? அதுவே ஏக்கத்தைத் தருகிறது. —கே. ஏ. எம்., சிதம்பரம்.

காளிகோட்டை ரகசியம் கண்ணனுக்கே சிகரமாக இருக்கிறது.
—அ. தமிழ்தாசன், திருச்சி - 4

'தமிழ் ஒளி'யின் 'கதை சொல்லு' என்ற கவிதை மிக மிக நன்று.
—எம். கே. மதிவாணன், பொற் குன்றம்.

வி. ஆர். பாலனைப்பற்றிய அறிமுகத்திலிருந்து அவர் விரைவில் முன்னணிக்கு வருவார் எனலாம்.
—பொ. காசிம், மேல் கல்கண்டார் கோட்டை.

மலர் 9 இதழ் 13

1—7—1958

# குழந்தைகளே !

கண்ணன் விடுமுறைக் காலப் போட்டிகளுக்கு நல்ல வரவேற்பு! முடிவுத் தேதியைத் தள்ளிப் போட்டதற்காகப் பலர் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் கலந்துகொள்ளாதவர்கள் எல்லாம் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு போட்டியில் கலந்துகொள்ள வேண்டும் என்பதே என் ஆசை.

கண்ணனில் முழு நீளக் கதையை ஒவ்வோர் இதழிலும் வெளியிட வேண்டும் என்று நேயர்கள் எழுதியிருக்கிறார்கள். நாற்பது பக்கங்களுக்குக் குறையாமல் வெளியிட வேண்டும் என்பதே அவர்கள் வேண்டுகோள். இதைக் கவனித்து, ஆவன செய்கிறோம்.

கண்ணன் பல ஊர்களில் குறித்த காலத்தில் கிடைக்கவில்லை என்று இன்னும் பலர் குறைப்படுகிறார்கள். இது எனக்கு மிகுந்த வருத்தத்தைக் கொடுக்கிறது. இனி, நிச்சயமாக இந்தக் குறைக்கு இடமில்லாமல் செய்வேன். கண்ணன் உங்களுக்குத் தாமதமாக வந்தால் அதை உடனே எனக்குத் தெரியப்படுத்துங்கள்.

கண்ணன் கழக அங்கத்தினர் கூப்பன்களைப் பூர்த்தி செய்து அனுப்பியவர்களுடைய பெயர்களை இந்த இதழ்க் கடைசி அட்டையில் காணலாம். இது தொடர்ந்து வெளிவரும். போட்டியில் கலந்துகொள்பவர்கள் தம் பெயர் வெளிவருவதற்காகக் காத்திராமல், கதையோ, கட்டுரையோ, கவிதையோ, சித்திரமோ எழுதியனுப்பலாம்.

**ஆசிரியர்.**

---

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.



## தே. பார்த்தசாரதி

கண்ணன் பத்திரிகையில் துப்பறியும் மோகன் என்ற தொடர் கதையை நீங்கள் படித்திருப்பீர்கள். அந்தத் தொடர் கதையை எழுதி முதல் பரிசு பெற்ற இந்த இளைஞர்தான் தே. பார்த்தசாரதி. திருச்சியில் பொருளாதார வகுப்பில் படிக்கும் கல்லூரி மாணவர். ஊக்கமும் ஆர்வமும் நிறைந்தவர். கண்ணன், கல்கண்டு, ஆனந்த விகடன், கல்கி முதலான பத்திரிகைகளில் எல்லாம் அந்தந்தப் பத்திரிகை வாசகர்களுக்கு ஏற்ப எழுதும் திறமை இவருக்கு உண்டு. இருபது வயது கூட இன்னும் இவருக்கு நிரம்பவில்லை. ஆனால் இருபதுக்கு மேற்பட்ட கதைகளும் கட்டுரைகளும் எழுதி, இளம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமானவர். இளம் உள்ளங்களைத் தம்முடைய மென்மையான ஹாஸ்யக் கட்டுரைகளால் மகிழ்வித்து வருகிறார். துப்பறியும் மோகன் என்ற தொடர் கதை விரைவில் புத்தக வடிவில் வர இருக்கிறது. முதல் முதலாக எழுதும் ஒரு கதை புத்தக உருவாக வரும் வாய்ப்புப் பெற்ற இந்த இளைஞர் வானொலி மூலமாகவும் சிறுவர் பகுதிக்கான கதைகள் எழுதி வருகிறார். இவருக்கு நல்ல எதிர்காலம் காத்துக்கொண்டிருக்கிறது என்பது வரையில் உறுதியாகக் கூறலாம்.

# கவர்னர் சச்சார்



இப்பொழுது நாட்டின் பல ராஜ்யங்களிலும் கவர்னர்களாகப் பெரும்பாலும், மந்திரியாகவோ ராஜ்ய முதல் மந்திரியாகவோ இருந்து அனுபவம் பெற்றவர்களைத்தான் நியமிக்கிறார்கள். சென்னை கவர்னர், கேரள கவர்னர் ஆகிய இருவரையும் போலவே நமது அண்டை ராஜ்யமான ஆந்திரப் பிரதேசத்தின் கவர்னராக இருப்பவரும் முன்னாள் முதல் மந்திரிதான். பஞ்சாப் ராஜ்யத்தில் அவர் 1947 முதல் முதல் மந்திரியாக இருந்திருக்கிறார். அதற்கு முன்பு பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையில் அங்கத்தினராகவும் பஞ்சாப் சர்க்காரின் நிதி மந்திரியாகவும் அனுபவம் பெற்றிருக்கிறார். பஞ்சாப் சட்டசபையில் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளாகக் காங்கிரஸ் கட்சி அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தொண்டு புரிந்திருக்கிறார்.

நாட்டின் விடுதலைப் போரில் பங்கு எடுத்துக்கொண்டு, ஒத்துழையாமை இயக்கத்தில் சிறையும் சென்றிருக்கிறார். இவர்தான் சன்லைட் இந்தியா இன்ஷியூர் கம்பெனியைத் தோற்றுவித்தவர். பஞ்சாப் சர்வகலாசாலையில் பி. ஏ. படித்து, சட்டப் படிப்பான எல். எல். பி. பட்டமும் பெற்று, 1918-ஆம் ஆண்டில் வழக்கறிஞராகப் பதிவு செய்துகொண்டவர் இவர். தேசீய இயக்கத்தில் பங்கு கொண்டதோடு, மற்றும் பல பொது ஸ்தாபனங்களிலும் இவர் தொடர்புகொண்டிருக்கிறார்.

இவர் 1893-ஆம் ஆண்டில் பிறந்தவர். இவர் மனைவியின் பெயர் லலிதா தேவி என்பது. முழுப் பெயர் ஸ்ரீ பீமசேன சச்சார். இந்த ஆண்டில் ஆந்திரப் பிரதேசத்தின் கவர்னராக நியமனம் பெற்றிருக்கும் இவர், அந்த ராஜ்ய மக்களின் அன்புக்குப் பாத்திரமாக விளங்கி வருகிறார். எந்தப் பகுதியில் இவர் தொண்டு புரிந்தாலும் தாய் நாட்டின்மீதும், இந்த நாட்டு மக்கள்மீதும் இவருக்குள்ள அன்பு மகத்தானது.

# திருக்குறிப்புத் தொண்ட நாயனார்

'கிங்கரன்'

தொண்டை மண்டலம் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய நாடாகும். இலக்கியத்திலும் அதன் சிறப்பைக் காண்கிறோம். இந்த நாட்டின் மத்தியில் பாலாறு என்னும் நதி பாய்கிறது. இந்த நாட்டில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நால்வகை நிலங்களும் அமைந்திருந்தன. இந்தப் பிரதேசத்தில் அமைந்த அழகான நகரம் காஞ்சீபுரம். இந்த நகரம் முக்கிய புண்ணிய க்ஷேத்திரங்களுள் ஒன்றாகும்.

ஒரு சமயம் உமாதேவியார் சிவபெருமானிடம், அவரை, ஆகம முறைப்படி பூஜிக்க விருப்பம் கொண்டிருப்பதாகக் கூறினார். சிவபெருமானும் அதற்கிணங்கிக் காஞ்சியம்பதியை அடைந்து அங்கே மாமரத்தின்கீழே கோயில் கொண்டிருக்கும் தம்மைப் பூஜிக்கும்படி கட்டளையிட்டார். அதன்படியே காஞ்சியை அடைந்து பூஜை செய்யத் தொடங்கினார் தேவியார்.

ஒரு நாள் தேவியைச் சோதிக்க விரும்பினார் சிவபெருமான். உடனே கம்பா நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. இதைக் கண்ட தேவியார் எங்கே தாம் பூஜை செய்யும் சிவலிங்கத்தையும் வெள்ளம் அடித்துச் சென்று விடுமோ என்று அஞ்சி, சிவபிரானைத் துதித்தபடியே லிங்கத்தை இறுகத் தழுவிக் கொண்டார். இதைக் கண்ணுற்ற தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். பின்பு சிவபிரானை நோக்கித் தாம் எடுத்துக் கொண்ட பூஜை தடங்கலின்றி முடிய வேண்டுமென்று அம்பிகை வேண்டினார். சிவபெருமான், ''என்றும் உன் பூஜைக்கு முடிவில்லை.'' என்று கூறிவிட்டார். அம்பிகை எந்நாளும் தம் பூஜை நிலைபெற்றிருக்கக் கேட்டுக் கொள்ளச் சிவபெருமானும் அருள் செய்து மறைந்தார்.

அன்றுமுதல் காமாட்சி என்ற திருநாமத்துடன் அம்பிகை தினந்தோறும் சிவபிரானைப் பூஜை செய்துகொண்டு காம கோட்டத்






## புத்தகாலயத்தில் . . .

புத்தகாலய விடுதி ஒன்றில் மேஜைக்குக் கீழ் அநேகம் பேர்கள் தங்கள் கால்களை நீட்டிக்கொண்டிருந்தனர். நானும் நீட்டியிருந்தேன்.

திடீரென்று ஒருவர் என் கால்களைத் தொட்டுக் கும்பிட்டு, 'எக்ஸ்கியூஸ் மி' என்றார். நான் வாசிப்பு மும்முரத்தில் அவர் அப்படி ஏன் செய்கிறார் என்பதை ஆராயவில்லை. சில நிமிஷங்கள் கழிந்தன. மறுமுறையும் அப்படியே செய்தார். அப்போதும் நான் சும்மா இருந்துவிட்டேன். மூன்றாம் முறையும் செய்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் பேசாமல் இருந்தேன். நான்காம் தடவையாக அவர் என் காலைத் தொட்டுக் கும்பிட்டு, ''எக்ஸ்கியூஸ் மி, ஸார்!'' என்று சொன்னபோது நான் ஏதோ சொல்ல வாயெடுத்தேன்.

அதற்குள் எனக்குப் பக்கத்திலிருந்த வேறு ஒருவர் அவரைப் பார்த்து, ''என்ன ஓய், நானும் மூன்று நான்கு முறையாகப் பார்த்துக்கொண்டிருக்கிறேன்; சும்மாக் காலால் உதைத்துக்கொண்டே இருக்கிறீரே!'' என்று முறைத்துக் கேட்டார். அப்போதுதான் எனக்கு விஷயம் விளங்கியது. ''ஓ! அது உங்கள் காலா? எக்ஸ்கியூஸ் மி ஸார்'' என்று அவரைப் பார்த்துச் சற்று உறக்கவே சொன்னார் என் காலைத் தொட்டுக் கும்பிட்டவர்.

—வெற்றிச்சுடர்.

தில் எழுந்தருளி இருக்கிறார்; காஞ்சீபுரத்தில் காமாட்சி ஆலயத்தைத் தவிர எண்ணிறந்த ஆலயங்களும் தீர்த்தங்களும் உள்ளன.

இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த இந்த நாட்டை, கரிகாற் பெருவளத்தான் என்ற அரசன் ஆண்டுவந்தான். அந்தச் சமயம் ஏகாலியர் குலத்தில் திருக்குறிப்புத் தொண்டர் என்ற சிறப்புப் பெயரையுடைய அடியார் அவதரித்தார். அவர் சிவனடியார்களிடத்தில் அதிகப் பற்று உடையவர். சிவனடியார்களைக் காணும் போதெல்லாம் அவர்களுடைய ஆடைகளைத் துவைத்துச் சுத்தம் செய்து கொடுத்துவந்தார்.

ஒரு சமயம் சிவபிரான் அவரைச் சோதிக்க எண்ணி, மிகவும் வயதான கிழவர் உருவத்தில் அழுக்குப் படிந்த கந்தல் ஆடைகளை அணிந்து அவர்முன் தோன்றினார். நாயனாரும் அவரை வணங்கி, அவருடைய ஆடைகளை அழுக்குப் போகத் துவைத்துச் சுத்தம் செய்து அளிப்பதாகச் சொல்லி, ஆடைகளைக் கொடுக்க வேண்டினார். இதைக் கேட்ட கிழவனார் மாலைக் கதிரவன் மலைவாயில் வீழ்வதற்குமுன் அவற்றைச் சுத்தம் செய்து கொடுத்துவிட வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில் கொடுத்தார்.

அதன் படியே ஒப்புக்கொண்டு ஆடைகளுடன் சென்றார் நாயனார். ஆனால் உடனே ஆகாயத்தில் திடீரென்று கார் மேகங்கள் ஒன்றுகூடி மழையைப் பொழிந்தன. வானமும் இருண்டது. இதைக் கண்ட நாயனார் தம் கடமையைச் சரிவர செய்ய முடியாது போகவே மனம் சோர்ந்து உள்ளம் நைந்து கல்லில் தம் தலையை மோதிக்கொண்டு உயிரை விட முயன்றார்.

அடுத்த கணம் அன்புக் கரங்கள் அவரைத் தழுவின. அவர்மீது மலர்கள் மழையாகப் பொழிந்தன. கொன்றை மலரை அணிந்த பெருமான் உமாதேவியுடன் அவருக்குக் காட்சியளித்து அவருடைய பக்தியைப் பாராட்டி, நற்கதியை அடையும் பேற்றையும் வழங்கி மறைந்தார்.



# காளிகோட்டை ரகசியம்

ஜனு

## 18. காளிகோட்டைக்கு ஆபத்து

நெடுமாறன் தன்னைப் பின்னால் துரத்திக்கொண்டு வரும் குதிரை வீரர்களை ஏமாற்றிவிட்டுச் செல்ல எண்ணினான். அவர்கள் சின்னக் காளி வேங்கையாரின் வேவுகாரப் படையினர்தான் என்பதை அறிந்துகொள்ள அவனுக்கு அதிக நேரம் ஆகவில்லை. அந்த மூன்று பேர்களையும் எதிர்த்து நின்று திருப்பியடிக்க அவனால் முடியும். அவன் தோளிலே வில்லும் அம்புகளும் இருக்கும்வரையில் அவனுக்கு அந்த மூன்று பேர் என்ன, முப்பது பேர் வந்தாலும் ஒரு பொருட்டல்லதான். இருந்தாலும் அவனுக்கு வீணாக நேரத்தைப் போக்க விருப்பமில்லை.

ஓடையைக் கடந்ததும் அவனுடைய குதிரை காட்டுப் பாதையில் செல்லத் தொடங்கியது. அந்தப் பாதையிலிருந்து பிரிந்து செல்லும் இரண்டு ஒற்றையடிப் பாதைகளைக் கண்டதும், நெடுமாறன் திரும்பிப் பார்த்தான். பின்பற்றி வந்த மூவரும் வேகமாகப் பின் தொடர்ந்து வருவது, அவர்களுடைய குதிரைகளின் குளம்படியோசையிலிருந்து கேட்டது. பாதை வளைவாக இருந்ததால் அவர்களைப் பார்க்க முடியவில்லை.

அவன் கிழக்குத் திசையாகச் சென்ற ஒற்றையடிப் பாதையில் தன் குதிரையைச் செலுத்தினான். அது ஒரு குறுக்கு வழி என்பது அவனுக்குத் தெரியும். அந்த வழியாகக் குதிரையில் செல்வது சுலபமல்ல. பூமியோடு பதிந்த பாறைகளும், பாறைகளை மறைக்கும் அடர்ந்த புதர்களும், புதர்களில் வசிக்கும் கொடிய வன விலங்குகளும் அந்தப் பாதையில் மிகுதி. கூட்டமாக வேட்டையாட வரும் வேடுவர்களுக்குத்தான் அந்த வழி ஏற்றது. குனிந்து, வளைந்து, ஏறி, இறங்கிப் போகும் அந்தப் பாதையில் சாதாரணமாக நடந்து செல்வதே கடினம். நிமிர்ந்தால் கொம்புகளிலே பெரிய பெரிய பைகளைப்போல் தொங்கும் தேன்கூடுகளில் இடித்துக்கொள்ள வேண்டியதுதான். அதுவும் காட்டுத் தேனீக்களைக் கலைத்தால் வேறு வினையே வேண்டியதில்லை. ஆயிர

மாயிரம் தேனீக்கள் 'நொய்' என்று சீறி விஷக் கொடுக்குகளால் ஆளேயே தொளேத்து எடுத்துவிடும். ஆயுதங்களோடு தாக்க வரும் படையை எதிர்த்துவிடலாம்; ஆனுல் அந்தத் தேனீக்களே எதிர்த்து நிற்கவே முடியாது. வேடுவர்கள் துஷ்டமிருகங்களே வேட்டையாட இந்தக் கூடுகளேயே பயன்படுத்துவார்கள்.

வேட்டைக்கு வருகிறவர்கள் பறையடித்து, துஷ்ட மிருகங் களேத் துரத்தும்போது, வழியில் தொங்கும் தேனீக்களேக் கலேத்து விட்டுவிடுவார்கள். அவ்வளவுதான்; ஓடிவரும் விலங்கு, கண்களேத் திறக்க முடியாமல் திணறிப்போகும். எந்தப் பக்கமும் திரும்ப முடியாமல் அது கொட்டுத் தாளாமல் தடுமாறும்போது, அதை வலே வீசிப் பிடிப்பதோ, அம்பினுல் அடிப்பதோ மிகவும் எளிது. ஆகவே பழக்கம் உள்ளவர்கள்தான் அந்தப் பாதையில் துணிந்து செல்ல முடியும். நெடுமாறனுக்கு அவ்வளவு பழக்கமில்லே. மேலும் செடிகளும் கொடிகளும் மண்டிய வழியில் வேகமாகச் செல்லவும் முடியாது. இருந்தாலும் அவனுக்கு அப்போது வேறு ஒரு யோசனே தோன்றியது. ஒற்றையடிப் பாதையை ஒட்டிய அடர்ந்த செடிகளுக்குப் பின்னே போய்த் தன் குதிரையோடு மறைந்து நின்றுகொண்டான். பின்னுல் வந்தவர்கள் நெடுமாறனேக் காணுமல் இன்னும் விரை வாகப் போக முயல்வது தெரிந்தது. அவன் ஒளிந்துகொண் டிருந்த இடத்தைத் தாண்டி அவர்கள் வெகுதூரம் போகும் வரையில் அவன் மறைவாகவே நின்றுகொண் டிருந்தான்.

அவன் எதிர்பார்த்தது போலவே குதிரையில் சென்ற மூவரும் கொம்பு ஒன்றில் தொங்கிய தேன் கூட்டில் ஒருவர்பின் ஒருவராக இடித்துக்கொண்டார்கள். தேன் கூட்டில் மொய்த்துக் கொண்டிருந்த தேனீக்கள் புற்றீசல்போல் கிளம்பி அவர்களேக் கவிந்துகொண்டு விட்டன. அந்த மூவரும் தேனீக்களோடு போராடிக்கொண் டிருந்த சமயத்தில், நெடுமாறன் சிரித்துக் கொண்டே மறைவிடத்திலிருந்து வெளிப்பட்டான். வந்த வழி யாகத் திரும்பி, காட்டுப் பாதையை அடைந்தான். அதற்கு மேல் அவனே யாரால் பின்பற்றிச் செல்ல முடியும்?

அவனுடைய குதிரை காற்றிலும் கடிய வேகத்தில் நாலு கால் பாய்ச்சலில் பறந்தது. காடு, மேடு, ஓடை, மடுக்களே யெல்லாம் அநாயாசமாகக் கடந்து, மலேயடிவாரத்திலே ஏரியின் அருகே இருந்த அவனுடைய குடிசையில் வந்து நின்றது. சிறிது நேரம் நெடுமாறன் அங்கே தங்கி, எழுத்தாணியால் ஓலேச் சுவடியில் எதையோ எழுதினுன். பிறகு அதை வழக்கமாக வைக்கும் இடத்தில் போட்டுவிட்டு, வெளியில் வந்து குதிரையில் ஏறிக்கொண்டான். செங்கணன் வசித்த காட்டூருக்குச் செல்லும் பாதையில் தன் குதிரையைச் செலுத்தினுன்.

காட்டூரில் வீடுகள் ஒரு வரிசையாக இல்லே. குப்பல் குப்ப லாக இங்கொன்றும் அங்கொன்றுமாக அமைந்திருந்தன. ஒரு புறம் பச்சைப் பசேல் என்று காணப்பட்ட பச்சைமலே; மறுபுறம் காளிகோட்டை வரையில் செல்லும் அடர்ந்த காடு. மலேகளில் மண்டியிருந்த அரிய மூலிகைகளின் மணமும், காட்டு மலர்களின்

நறுமணமும் அந்தப் பள்ளத்தாக்கில் கலந்து வீசிக்கொண்டே யிருந்தது. இயற்கை யழகும் வளமும் கொழிக்கும் அந்தப் பகுதி யில்தான் செங்கணன் தன் தாயோடு வசித்து வந்தான். கம்பும் சோளமும், கையால் பறிக்கும்படி குலுங்கும் காயும் கனியும் கொண்ட தோட்டத்தின் நடுவே அந்தக் கூரை வேய்ந்த குடிசை அமைந்திருந்தது. எத்தனை ஆண்டுகளாயினும் அங்கே இருப்பவர் களுக்கு உணவுக்குப் பஞ்சமே இல்லை. அவர்கள் வெளியார் தொடர்பு இல்லாமலே வசதியாக உண்டு, களித்து, வாழ்ந்து வந்தார்கள். தேனும் தினையும் மதுவும் மாமிசமும் அவர்களுக்கு ஏராளமாகவும் எளிதாகவும் கிடைத்தன. பசுக்களும் ஆடுகளும் சுயேச்சையாக மலைகளில் மேய்ந்து திரிந்துவிட்டு வந்து, புஷ்டி தரும் பாலைக் குடம் குடமாகச் சொரிந்து வந்தன. நோய் நொடி என்ருல் அந்தப் பகுதியில் வாழ்ந்த வேட்டுவர் குலத்தினருக்கு என்னவென்றே தெரியாது.

செங்கணனின் தாய் தனியேதான் ஒதுப்புறமாகத் தன் மகனேடு வசித்து வந்தாள். நடுத்தர வயதுள்ள அவள் செங்கண னின் சகோதரியைப் போலவே காணப்பட்டாள். கூட்டம் கூட்டமாக வசித்த வேடுவர்கள் அவளுக்குத் தனி மதிப்புக் காட்டினுர்கள். முகத்திலே அன்பும் அருளும் நிறைந்த அந்த அன்னையின் முகம் நெடுமாறனைத் தனியே கண்டதும் கலக்கம் கொண்டது. செங்கணனுக்கு என்ன நேர்ந்துவிட்டதோ என்ற அச்சம் உண்டாயிற்று.

ஆனுல் நெடுமாறன் வரும்போதே புன்னகையோடு வந் தான். அவனை அன்போடு வரவேற்று, உட்காரச் சொன்னுள் அந்த அன்னை.

நெடுமாறன் அகிணிக் கட்டிலில் அமர்ந்துகொண்டான். "அம்மா!" என்று செங்கணனைப் போலவே அவனும் அவளைத் தன் தாயாகக் கருதி அழைத்தான். அவன் ஏதோ சொல்ல வந்திருப்பதை அறிந்த அந்தத் தாய், "முதலில் பசியாறிவிட்டு, அப்புறம் சொல்ல வந்ததைச் சொல்லலாம்!" என்று சொல்லி, அவனுக்குப் பிடித்த கனி கிழங்குகளையும் தேன் தினைமாவையும் கொண்டுவந்து வைத்தாள்.

நெடுமாறன் வயிறு புடைக்க ஒரு கை பார்த்துவிட்டு, "அம்மா! செங்கணன் இப்போது காளிகோட்டையில் இருக் கிருன். அவனைப்பற்றிய விவரங்களை அறிந்து போகவே நான் இப்போது அவசரமாகப் புறப்பட்டு வந்திருக்கிறேன்!" என்று கூறினுன்.

செங்கணன் தாய் இதைச் செவியுற்றதும் திடுக்கிட்டாள். நெடுமாறன் இதற்கு முன் பல தடவை இங்கே வந்து சென்றிருக் கிருன். யாருமே அவளை இதுபோல் கேட்கத் துணியமாட்டார் கள் என்பது அவனுக்கு நன்ருகத் தெரிந்திருக்கும். அப்படி யிருக்க, அவன் இப்படிக் கேட்டறிய முன் வருவானேன்? அந்தத் தாயின் முகம் வாட்டமுற்றது. பழைய நினைவுகளைக் கிளறி, ஆறியதுபோல் தோன்றிய மனப் புண்ணைக் கிண்டுவானேன் என்று அவள் வேதனைப்பட்டாள்.

“அப்பா நெடுமாறா! இதற்கு இப்போது என்ன அவசியம் வந்தது? நான் எதை மறந்திருக்க நினைக்கிறேனோ அதை ஏன் நினைவுபடுத்துகிறாய்! இதனால் என் வேதனைதான் இன்னும் அதிகமாகும்!” என்றாள்.





''நான் வேறு விவரங்களைக்கூட அறிய விரும்பவில்லை. செங்கணனுடைய தந்தை இப்போது இருக்கிறாரா என்பது மட்டும் தெரிந்தால் போதும்!'' என்றான்.

செங்கணன் தாயின் கண்களிலே பொல பொலவென்று கண்ணீர் அரும்பியது. உடல் வெடவெடவென்று நடுங்கியது. ''எனக்கு எப்படித் தெரியும்? செங்கணன் பிறந்ததிலிருந்து நான் அவரைப் பார்த்ததில்லை!'' என்றாள் குரல் தடுமாற.

''ஆனால் நேற்று அவரை நான் பார்த்தேன்?''

அந்தத் தாய்க்குத் தூக்கிவாரிப் போட்டது. ''எங்கே, எப்போது, எப்படி?'' என்று நெஞ்சு துடிக்கக் கேள்விகளை அடுக்கினாள்.

''செங்கணனைப் போலவே பூனைக் கண்களும், செம்பட்டைக் குழல் சுருளும் அகல விரிந்த மார்பும் ஆஜானுபாகுவான தோற்றமும் அவர் கொண்டிருக்கிறார்.. இடது கையிலே....''

''போதும்; நிறுத்து; அதற்குமேல் சொல்லாதே! என் நெஞ்சு வெடித்துவிடும்போல் இருக்கிறது; அவரேதான், அவரேதான் செங்கணன் தந்தை, அவரை எங்கே பார்த்தாய், சொல்லேன் சட்டென்று!'' என்று படபடத்தாள் அவள்.

"அம்மா, அவர் காளிகோட்டையில்தான் இருக்கிறார்!"

"எங்கே, காளிகோட்டையிலா? அங்கேயா அவரைத் தனியாக விட்டு வந்திருக்கிறாய்?" என்று கூவினாள் செங்கணன் தாய்.

"ஆமாம்; ஆனால்..."

"அவர் செங்கணனைப் பார்த்தாரா?"

"அதைத்தான் சொல்ல வந்தேன். அவரும் அவனைப் பார்க்கவில்லை. அவனும் அவரைப் பார்க்கவில்லை!"

"அப்பாடா! என் வயிற்றிலே பாலை வார்த்தாய்! பிழைத்தேன். ஆனால் உடனே இதைவிட்டு நீ புறப்படு. போய், செங்கணனைக் கையோடு இங்கே அழைத்து வந்துவிடு! ஓடு, ஓடு!" என்று எழுந்து, அவனை முடுக்கினாள்.

நெடுமாறனுக்கு இந்தத் தாயின் பயத்துக்குக் காரணம் புரியவில்லை. பெற்ற மகன் தந்தையைப் பார்த்தால் என்ன மோசம் வந்து விடுமாம்? ஒரு தந்தை தன் சொந்த மகனைப் பார்ப்பதனால் என்ன விபரீதம் நேர்ந்து விடுமாம்?

"அம்மா! கவலைப்படாதீர்கள். செங்கணன் தக்க பாதுகாப்பில்தான் இருக்கிறான். அதையும் தவிர, அவன் இந்நேரமெல்லாம் ஏரிகரைக் குடிசைக்கு வந்துகூட இருப்பான். ஆனால் ஒன்றே ஒன்றுமட்டும் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தயவு செய்து அதை எனக்குத் தெரிவிக்க வேண்டும்..." என்று கெஞ்சுதலாகக் கேட்டுக்கொண்டான் நெடுமாறன்.

"நெடுமாறா! வீணாகப் பழைய நினைவுகளைக் கிளறாதே!"

"தாயே! காளிகோட்டைக்கு இப்போது ஆபத்து நேர்ந்திருக்கிறது. அதனாலேயே உங்களுக்கு இந்தத் தொந்தரவைக் கொடுக்கத் துணிந்தேன் நான். உங்களுக்கு இது எத்தனை வேதனையைத் தருவதாக இருந்தாலும் என்னை மன்னித்து விடுங்கள். உங்களுடைய பயத்துக்கு உண்மையான காரணம் என்ன? இதைச் சொல்லுங்கள்; போதும்!" என்றான் நெடுமாறன்.

"ஏது, ஏது; ஒன்றே ஒன்று என்று நீ கேள்விமேல் கேள்வியாகக் கேட்டுக்கொண்டே போகிறாயே! அதைச் சொல்வதென்றால் அத்தனை எளிதென்று நினைக்கிறாய்! அது ஒரு பெரிய கதை! அதற்கும் காளிகோட்டைக்கு நேர்ந்த ஆபத்துக்கும் என்ன சம்பந்தம்?" என்றாள் அந்தத் தாய்.

"சம்பந்தம் இருக்கிறது. அதை எப்படிச் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. நீதியை நிலைநாட்டுவதற்காகவேனும், எனக்கு நீங்கள் அந்த விவரங்களைச் சொல்லத்தான் வேண்டும்!" என்று வற்புறுத்திக் கேட்டான் நெடுமாறன்.

தன் மகனுக்குச் சமமான நெடுமாறனின் வற்புறுத்தலுக்கு இணங்கி, சோகமும் துன்பமும் நிறைந்த அந்தக் கதையைச் சொல்லத் தொடங்கினாள் **அன்னை**. அப்போது, தோட்டத்தினுள்ளே யாரோ நடந்து வருவதுபோலச் சத்தம் கேட்டது. நெடுமாறன் எட்டிப் பார்த்தபோது ஒருவரையும் காணவில்லை.

(தொடரும்)

# எங்கள் வீட்டு வேலைக்காரி

'சசிதேவன்'



எங்கள் வீட்டு வேலைக்காரி
எச்சுமி அம்மா - அவள்
எங்களுக்குத் தரும்தொல்லை
கொஞ்சமோ அம்மா!
அங்கும் இங்கும் ஓடிவேலை
ஆக்குவது போல் - அவள்
அபிநயம் பிடித்திடும்
அற்புதம் தன்னை,
நீங்கள் வந்து ஒருமுறை
பார்க்க வேணுமே! - பார்த்தால்
நிச்சயமாய் மூக்கில் விரல்
வைக்க வேணுமே!
வீட்டைக் கூட்டிப் பெருக்கச்சொன்னால்
விளக்குத் தேய்ப்பாள் - அவள்
மாட்டைப் பிடித்துக் கட்டச்சொன்னால்
மாடிக்குப் போவாள்!
பாலைக் கறந்து வைக்கச் சொன்னால்
படுக்கை விரிப்பாள் - அவள்
சேலை, வேட்டி துவைக்கச் சொன்னால்
மாலை தொடுப்பாள்!
கடைக்குப் போகச் சொன்னால் உடல்
காய்ச்சல் என்பாள் - வீட்டு
மடையைச்சுத்தம் செய்யச் சொன்னால்
மயக்கம் என்பாள்!
இடையே 'கொஞ்சம் சோறிருக்கு,
எடுத்துக்கொள்' என்றால், - அவள்
தடையில்லாமல் உள்ளே தள்ளி
ஏப்பம் விடுவாள்!
எங்கள் வீட்டு வேலைக்காரி
எச்சுமி அம்மா - அவள்
எங்களுக்குத் தரும் தொல்லை
எத்தனையோ அம்மா!

# நீங்களும் நானும்

**'ஆர்வி'**

**எஸ். ஏ, அன்பானந்தன், கோவில் பட்டி.**

கே: கங்கா நதியின் பிறப்பிடம் எது?

ப: இமாலயத்திலுள்ள கோமுகி என்ற இடத்தில்தான் கங்கை உற்பத்தியாகிறது.

**இரா. சீனிவாசன், திருச்சி.**

கே: கடவுளாலும் ஆகாத காரியம் ஒன்று உண்டா?

ப: உண்டு; நடந்ததை நடவாததாகச் செய்ய அவராலும் முடியாது.

**கே. ஏ. முகம்மதலி, சிதம்பரம்.**

கே: பயன் இல்லாதவை எவை?

ப: கருமியின் செல்வம், தீயவனின் அறிவு, ஆபத்தின்போது கைவிட்டுச் செல்லும் நண்பன், வீரமும் தயையும் இல்லாதவனுடைய அழகு இவற்ருல் யாருக்கும் பயனில்லை.

**ஏ. பி. மீனுக்ஷிசுந்தரம். தென்காசி.**

கே: கடவுளை விலைக்கு வாங்க முடியுமா?

ப: முடியும்; மாசற்ற பக்திதான் அவருடைய விலை!

**ஆர். லக்ஷ்மணன், பட்டுக்கோட்டை.**

கே: நெருப்புக் குச்சியின் உஷ்ணம் எத்தனை டிகிரி இருக்கும்?

ப: சுமார் 1600 டிகிரிக்குமேல் இருக்கும் என்று தெரிகிறது.

**கே. ஏ. விசாலம். குடந்தை.**

கே: ஆண் பிள்ளைகளைவிடப் பெண் பிள்ளைகள் மன உறுதி படைத்தவர்கள் என்பது உண்மையா?

ப: பொதுவாக அப்படித்தான் தெரிகிறது. தனித் தனியாகப் பார்த்தால் சில சந்தர்ப்பங்களில் இது மாறுபாடாகவும் இருப்பதைக் காண்கிருேம்.

**எஸ். எஸ். ஜி. ராஜா, விருதுநகர்.**

கே: பழைய நாணயம் போய், புதிய நாணயம் வந்தது பற்றித் தங்களுடைய அபிப்பிராயம் என்ன?

ப: பழைய நாணயம் சுத்தக் கருமி; புதிய நாணயம் கொஞ்சம் தாராளம். எந்த நாணயமாக இருந்தாலும் சொந்த நாணயமாகும்படி உழைக்க வேண்டும் என்பதே என் அபிப்பிராயம்.

**இரா. வடிவாம்பாள், சிந்தாதிரிப் பேட்டை.**

கே: தற்போது இந்தியாவின் சிறந்த கவிஞர் யார்?

ப: அப்படி எல்லாரும் ஒப்புக் கொள்ளக் கூடிய ஒருவர் இன்று இல்லை.

**ரெ. முருகையன், விசலூர்.**

கே: எதிர் காலத்தில் நடக்கப் போகும் நிகழ்ச்சிகளை முன் கூட்டியே உறுதியாகச் சொல்ல முடியுமா?

ப: அப்படி ஒருகாலும் சொல்ல முடியாது. இதைச் சொன்னுல் பலர் நம்ப மாட்டார்கள். ஜோஸ்யர்கள் சண்டைக்கு வருவார்கள். எதிர்கால நிகழ்ச்சிகள் சிலவற்றை அறிவாளிகள் உத்தேசமாக ஊகித்து அறிந்து கூறிவிடுகிருர்கள். ஞானிகள் உணர்ந்துவிடுகிருர்கள்.

**கி. கலியபெருமாள், ஆக்கூர்.**

கே: அருமையாகக் கதைகள் எழுதும் 'ஜனு' அவர்கள் யார்?

ப, திறமையாக எழுதும் பெருமைக் குரியவர் அவர். புனைபெயரில் மறைந்திருக்கும் ஒருவரின் இயற் பெயரை நான் கூறுவதில்லை.

**எஸ். எம். கார்த்திகேயன், வேலூர்.**

கே: இன்று உலகிலேயே மிகச் சிறந்த ஓவியர் யார்? இந்தியாவில் யார்?

ப: உலகிலே மிகச் சிறந்த ஓவியராக மதிக்கப்படுபவர் பிராங்க் கிராங்குவின். இந்தியாவில் சிறந்த ஓவியராகக் கருதப்படுபவர் சென்னை, கலைஞர் காலேஜ் பிரின்ஸிபாலான ஸ்ரீ ராய் சௌதுரி அவர்கள்.

13



# இப்படியும் உண்டா?

சம்பந்தம்

நாலு பேர்கள் சேர்ந்து ஒரு காரியத்தை நிர்வகித்தால் அதில் அபிப்பிராய பேதம் இல்லாமலிருக்குமா? அதுவும் இது பெண்கள் விஷயம்! 'அவரவர்கள் சேர்ந்து அரசாங்கத்தை நெருக்கும்பொழுதுதான், நாமும் நெருக்க ஆரம்பிக்க வேண்டும். அப்பொழுதுதான் நம் காரியமும் கைகூடும். 'மயிலே மயிலே, இறகு போடு' என்றால் போடுமா?' என்ற அபிப்பிராயமே மேலோங்கியது. உடனே அவ்வூர் மாணவிகள் அனைவரும் சேர்ந்து ஓர் அவசரக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டார்கள். சங்கத்தின் காரியதரிசியாக ஒரு வாத்தியார் அம்மாள் இருந்தாள்.

காரியதரிசி அம்மாளைச் சும்மா சொல்வதற்கில்லை. ஆடி, ஓடி வேலை பார்த்தாள். கூட்டத்தில் பேசுவதற்கென தகுதியான வெளியூர் புள்ளியொன்றையும் ஏற்பாடு செய்தாள். ஆனால் அந்தக் கூட்டத்துக்குக் காரியதரிசி அம்மாளால் வரமுடியாமற்போய் விட்டது. எதிர்பாராதவிதமாய் அந்த அம்மாளுக்கு அன்று உடம்புக்கல்லவா வந்துவிட்டது!

அது குறித்து அன்று அனைவருக்கும் அளவில்லா வருத்தந்தான். சங்கத்துத் தலைவியே சற்று ஆடி ஓடி வேலை பார்க்க வேண்டியதாகப் போயிற்று. என்ன செய்வது? எதிர்பாராத விதமாய் அன்று கூட்டமும் அதிகம்.

நேரமாகிக்கொண்டேயிருந்தது. கூட்டத்தில் பேச வேண்டிய வெளியூர்ப் புள்ளியோ ரெயில் மூலம் வந்தாகவேண்டும். அதனால் அடிக்கொரு தடவை ஸ்டேஷனுக்கு ஆள்மேல் ஆள் அனுப்பிக்கொண்டிருந்தார்கள். கடைசியில் அந்த ரெயில் அன்று ஒரு மணி நேரம் தாமதம் என்ற செய்திதான் கிடைத்தது. சங்கத்துத் தலைவியும் மற்றும் சில அங்கத்தினர்களும் 'அடடா! என்ன செய்வது?' என்று கையைப் பிசைந்து கொண்டார்கள். அதே சமயத்தில் அதிவேகமாய் வந்த கார் ஒன்று வாசலில் 'சரக்!'கென்று வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய அம்மாள் அவசரமாய் உள்ளே வந்தாள். ஆகிருதியோ சற்றுப் பெரிது. பிறகு இரைக்காமல் இருக்குமா? நேரே சென்று மேடை மீதேறி மேஜைக்கருகில் நின்றுகொண்டாள். நேரமாகி விட்டதென்று உடனே பேசவும் தொடங்கி விட்டாள்.

''வண்டி தாமதமென்று கேள்விப்பட்டு நான் எங்கே வராமற்போய் விடுகிறேனோ என்று எண்ணி விட்டீர்களோ, என்னவோ! இதோ வந்து எப்படியும் விழுந்து விட்டேன், பாருங்கள். எப்பொழுதுமே நான் இப்படித்தான். ஒரு காரியத்தை எடுத்தால் அதைத் தீர்த்துக் கட்டிவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன். வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என ஆகிவிட வேண்டும் எனக்கு.''

அதற்குள் ஒரு மாணவி மாலை போட வந்தாள். ''பரவாயில்லை. இருக்கட்டும். ஏன், எனக்கு மாலை போட்டு என்னை மயக்கிவிடப் பார்க்கிறீர்களா? முதலில் நான் வந்த காரியம் முடியட்டும். பிறகு நானே கழுத்தை நீட்டி மாலையைப் போட்

டுக் கொள்கிறேன்'' என்றுள் அந்த அம்மையார்.

உடனே கூட்டத்தில் பலத்த கைதட்டல்! வெறும் கைதட்டலோடு கை வளையல்களின் ஒலியும் சேர்ந்துகொண்டால் பிறகு அது நீண்டு ஒலிக்கக் கேட்கவேண்டுமா?

''போதும், ஆரவாரம்!'' என்று அந்த அம்மாள் கையமர்த்தினுள்.

''தயவு செய்து நான் சொல்வதைக் கவனித்துக் கேட்க வேண்டும் பிறகு என்மேல் வருத்தப்பட்டுக் கொள்ளாதீர்கள். இங்கே நடக்கும் அநியாயங்களையும் ஊழல்களையும் நான் நன்ருய்த் தெரிந்துக் கொண்டேன். அதன் பிறகுகூட என்னல் சும்மா யிருக்க முடியுமா?'' என்று பக்கத்து நாற்காலியில் அமர்ந்திருந்த தலைவியைப் பார்த்துக்கொண்டே மேஜையைக் குத்திப் பேசினுள் அந்த அம்மாள்.

அனைவரும் 'ஆ'வென வாயைப் பிளந்துகொண்டு கேட்டார்கள். ஆனல் தலைவி மாத்திரம், முகத்தில் ஏதோ லேசான கலவரத்துடன் தன் மூக்குக் கண்ணுடியை அடிக்கடி கழற்றி, துடைத்து மாட்டிக்கொண் டிருந்தாள்.

''நான் எந்த அக்கிரமத்தையும் சகிக்கமாட்டேன். அது என்கூடப் பிறந்த குணம். பிறகு அதை வளர விடுவேனு? இதோ, இந்த அம்மாளை லேசுப்பட்ட மனுஷி என்று எண்ணி விடாதீர்கள்'' என்று தன் நெஞ்சை வீராவேசமாகத் தட்டிக் காண்பித்தாள் அந்த அம்மாள்.

''என்ன இது? எதைப்பற்றிப் பேசுகிறீர்கள்?'' என்று சற்று உரக்கவே கேட்டாள் பக்கத்திலிருந்த தலைவி.

''ஆகா! உங்களுக்கு ஒன்றுமே தெரியாது. அப்படியே ஆகாயத்திலிருந்துதானே குதித்து விட்டீர்கள்! செய்கிற காரியத்தையும் செய்து விட்டு, கௌரவமாய் வந்து உட்கார்ந்துக் கொண்டீர்களே!''

அதற்குள் கூட்டத்தில் எங்கேயோ ஒரு மூலையில் யாரோ ஓர் அம்மாள் மாத்திரம் பலமாய்க் கைதட்டும் சப்தம் கேட்டது. உடனே அனைவரும் அந்தத் திக்கைத் திரும்பிப் பார்த்தார்கள்.

அதைக் கண்ட அந்த அம்மாள், ''இதோ இந்த சிறுவிஷயத்திற்காக அனைவரும்ம திருமபிப் பார்க்கிறீர்களே! இது மாதிரி நம் சங்கத்தின் நடவடிக்கைகளை அவ்வப்பொழுது கவனித்திருந்தால், இத்தனை புரட்டுகள் நடந்திருக்குமா? வெறும் அங்கத்தினராயிருந்து கொண்டு தவருது சந்தா செலுத்தி விட்டால் ஆயிற்ரு?'' என்ருள்.

அதற்குள் தலைவி எழுந்து ஏதோ பேச முயன்ருள். வந்த அம்மாள் முறைத்துப் பார்த்தாள் தலைவியை. ''அம்மா தலைவியாரே, வாயை மூடுங்கள். எல்லாம் உள்ளதைச் சொன்னல் நோப்பாளமாகத்தானிருக்கும். எனக்கு ஒன்றும் தெரியாது. அனைத்திற்கும் காரியதரிசிதான் பொறுப்பு என்று தட்டிக் கழிக்கப் பார்க்கலாம் நீங்கள். அது முடியுமா? நீங்களிருவரும் சேர்ந்து கொண்டுதானே சங்கத்துப் பணத்தைச் சுளை சுளையாகச் சாப்பிட்டிருக்கிறீர்கள்?''

அதைக் கேட்டு அங்கே வேடிக்கை பார்க்க வந்த சில பையன்கள் பலமாய்க் கைதட்டினுர்கள். ஒரு குழந்தை கைதட்டிக் கொண்டே இருந்தாள்.

''பாரும், தலைவி அவர்களே! அந்தக் குழந்தைகூட உங்கள் இழிவான செய்கையைக் கேட்டுச் சிரிக்கிறது.''

தலைவியின் முகம் ஜிவ்வென்ருகி விட்டது. அதற்குள் சங்கத்தைச் சேர்ந்த ஒரு மாணவி எழுந்து வந்து, பிரசங்கியின் கையைப் பற்றிக்கொண்டு ஏதோ கேட்கப் போனுள்.

பலமாகக் கையை உதறிக் கொண்டே, ''நான் வெளியூரிலிருப்பதால் இவர்களுடைய நடவடிக்கைகள் அனைத்தும் தெரியாதென்று நினைத்து விட்டீர்கள்



போலும். தலைவியும் காரியதரிசியும் கூடிக்கொண்டு பொதுப் பணத்திற்குப் பாங்கியில் தினக் கணக்கு வைத்துக்கொண்டது உட்பட எனக்குத் தெரியும். 'இந்தத் தலைவியின் மீதும், காரியதரிசியின் மீதும் நம்பிக்கை யில்லை; நம்பிக்கை யில்லை: நம்பிக்கை யில்லை' என்று அனைவரும் ஆரவாரம் செய்யுங்கள், சொல்கிறேன். மாதர்கள் 'சிட் பண்டாம்' மண்ணாங் கட்டியாம். அத்தனையும் பகற்கொள்ளை!''

உடனே அங்கே கூடியிருந்த அனைவரும் அப்படியே ஆச்சரியத்தில் மூழ்கிப் போனார்கள்.

உடனே விஷயம் புரிந்து விட்டது. விரலைக் கடித்துக் கொண்டாள் தலைவி. வெடுக்கென எழுந்து, ''அம்மா, நீங்கள் பேச வேண்டிய கூட்டம், இதே கட்டிடத்தின் மேல்மாடியில் அல்லவா நடக்கிறது இப்படியும் உண்டா? இது கலாசாலை மாணவிகள் சங்கம் அல்லவா?'' என்று சொன்னாள்.

''என்ன! ..'' என்று அப்படியே மயக்கம் போட்டு விழுந்து விட்டாள் அந்த அம்மாள். அந்த அம்மாளின் கனத்தில் எங்கே தரை பெயர்ந்துவிடப் போகிறதோ என்று சில பெண்கள் ஓடிவந்து அவளைத் தாங்கினார்கள். அப்படியும் அந்தக் கனத்தைத் தாங்க முடியாமல், மெதுவாய்க் கீழே விட்டார்கள்

கூட்டத்தில் ஒரே ஆரவாரம்! அனைவரும் ''உஸ் உஸ்'' என்று அடக்கினார்கள். அமைதி மீண்டது.

அப்பொழுதுதான் ரெயில் வந்தது போலும் அந்தக் கூட்டத்திற்கு வாவேண்டிய அம்மாள், ''எதிர்பாராவிதமாய் வண்டி தாமதித்துவிட்டது. இதுவரை நீங்கள் அமரிக்கையாய் அமர்ந்திருப்பதைக் கண்டு நான் மிகவும் களிப்புறுகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே புன்முறுவலுடன் உள்ளே நுழைந்தாள்.


ஹாஸ்யக் கதம்பம்!
ஓங்க! வகுப்பிலேயே யார்டா, ரொம்ப நல்லா படிக்கறவா இருக்கா?
எங்க வாத்யார்தாம்பா!
என்ன மாமா! இந்து ரெண்டு முள்ளோ குத்திண்டு வந்திருக்கேள் கண்ணுக்கே தெரியல்லே! கொஞ்சம் பெரிய முள்ளா குத்திண்டு வரப்படாதோ!
பொடியை போட்டு கிட்டு, இந்தக் கம்பை வாங்கிக்கோ தாத்தா! எல்லாரும் என்னைத் தாத்தான்னு கேலி பண்றுங்க!
போடா போ! கனவிலே கண்ட பணம், செலவுக்கு ஆகுமா? நீஎன்னமோ சொல்லறியே?
உனக்கு ஒண்ணும் தெரியல்லே கனவிலே யே செலவு பண்ணிருக்கனும்
என்னே! என்ன வாருக்கிளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டின்னு! நிநச்சிண்டிருக்கியா?




சந்துரு 'நோட்டீஸ் போர்'டைப் பார்த்தான். அவன் ஆத்திரம் அதிகமாகிகொண்டிருந்தது. ஒரு தடவை அந்த 'லிஸ்ட்' முழுவதும் எழுத்துவிடாமல் வாசித்தான். அப்படியும் சந்தேகம். மறுமுறை...மூன்றாம் முறை...ஊஹூம் ஸெலெக்ஷன் லிஸ்டில் அவன் பெயரைக் காணோம். சிவந்த கன்னத்திலே, கண்ணிலிருந்து துளித்த இரண்டு முத்துக்கள் ஜொலித்துப் பின் வழிந்தோடின.

'த்ஸொ..த்ஸொ' ச்சு கொட்டிய மாணவனைப் பார்த்தான் அவன். மறுநொடி..குபீரென்று அவன்மீது பாய்ந்தான்..அடி..குத்து..உதை..“ஐயோ அம்மா!'' என்று சாய்ந்தான் முரளி. கூட்டம் கூடியது. 'ரிஸல்ட் வந்த பெருமையில் ரோசத்தைப் பாருடோய்!'' என்றனர் சிலர். ''ரெட்டை மண்டை ஸாரின் பிள்ளையின் திமிருக்கு இது நன்றாக வேணுமடா!'' இது மற்றவர்களின் அபிப்பிராயம்.

ஆசிரியர் எவரும் வருவதற்குள் பையுடன் கம்பி நீட்டினான் சந்துரு. வீடு திரும்பவில்லை. ஊரைச் சுற்றிவிட்டு, செங்குரங்காக மாலையில் வீடு திரும்பிய அவனைப் பார்த்துத் தந்தை கேட்டார்: ''துரைவாளுக்கு ஸெலக்ஷன் ஆகவில்லையாமே!''

சந்துரு பதில் சொல்லவில்லை. சுளீரென்று அறை விழுந்தது அவன் கன்னத்தில். அவன் சாப்பிடவில்லை. பேசாமல் படுத்துக் கொண்டுவிட்டான். ஒருவரும் அவனைக் கூப்பிடவுமில்லை. பலன் விபரீதமாகுமென்று அவர்களுக்குத் தெரியும்.

* * *

சந்துரு துடியான பையன். கெட்டிக்காரன். பள்ளி மாணவர் யூனியனின் காரியதரிசி அவன்தான். அவனுக்கு ஸெலக்ஷன் ஆகாததில் வியப்பு ஒன்றுமில்லை. காரணம், அவனுடைய அளவுக்கு மீறிய செல்வாக்கு, மாணவர்களை வசியப்படுத்தியதுதான். அவனது வாக்குச் சாதுரியத்தில் மயங்கினர் மாணவர்கள். அவன் எள் என்னுமுன் எண்ணெயாக நின்றனர். இப்பேர்ப்பட்ட காரியதரிசியை ரெட்டை மண்டை சார் அவமானப் படுத்திவிட்டாரே ஒரு நிமிஷத்தில்..கடைசியில்..விளைவு..?

''வீட்டிற்கு நேராக வா. வேலையிருக்கிறது'' என்று அப்பா சொல்லியிருந்தார். அன்றுதான் ரங்கசாமி ஸாருக்குப் பெரிய பார்சல் கட்டு வந்திருந்தது தபாலில். ''எலே சந்துரு, கையில் ஏற்கனவே ஏகப்பட்ட சாமான்



மதுரையிலிருந்து ரெயில் புறப்பட்டு விட்டது. அப்போதுதான் தலைதெறிக்க ஓடிவந்தார் ஒருவர். யாரெல்லாமோ அவரைத் தடுத்துப் பார்த்தார்கள். பல் உடையாக் குறையாய் அவர் ரெயிலில் தொற்றி ஏறிவிட்டார். உள்ளே வந்தபின் தம் வீரப்பிரதாபத்தைப் பெருமையுடன் சொன்னார்.

''பார்த்தீர்களா, ஸார்! நான் இவ்வளவு கஷ்டப்பட்டு ஏறவில்லை என்றால் இன்றைக்குத் திருச்சிக்குப் போய்ச் சேர முடியுமா? என் வரவை நம்பி எத்தனை பேர் அங்கே காத்திருப்பார்கள்!'' என்றார்.

''இது திருநெல்வேலிக்குப் போகிற ரெயிலாச்சே!'' என்று ஒருவர் உறக்கச் சொல்லியபோதுதான் அந்த வீரப்பிரயாணியின் முகம் பேயறைந்ததுபோல் ஆகியது.

—வெற்றிச்சுடர்

இருக்கு. ஆகவே நீ இந்தப் பார்சலை நேராக என் வீட்டில் கொண்டு ஒப்படைத்துவிடு'' என்றார். சந்துருவுக்கு இரண்டுங்கெட்டான் நிலை. ''இல்லை ஸார். எனக்கு இன்று வேலை அதிகமிருக்கிறது வீட்டில். ஆகவே..''

''என்னடா, மதமதப்பு அதிகமாகிவிட்டதோ? வாத்தியார், நான் சொல்கிறேன். 'ஸெக்ரடரி' என்கிற கர்வமோ உனக்கு?''

''உண்மையாக ஸார்! அப்பாவிடமிருந்து நாளைக்குக் கடிதம் வேணுமானாலும் வாங்கி வருகிறேன் ஸார், நான் சொல்வது உண்மையென்று.''

''சரிதான் போடா. நீ ஒரு சந்துரு இல்லாவிட்டால் வேறொரு கிங்கரன்.''

'விசுக்'கென்று கோபம் வந்துவிட்டது 'ஸாரு'க்கு. எப்போதுமே சிடுசிடுப்பு. அதுவும் கணக்கு வாத்தியார்; கேட்கவேண்டுமா?

மறுநாள்.

மிகவும் முயற்சி செய்தும் பள்ளிக்கூடத்திற்குச் செல்ல ஐந்து நிமிஷம் தாமதமாகிவிட்டது சந்துருவுக்கு. முதல் நாள் சம்பவம் வேறே அவன் நெஞ்சை உறுத்தியது.

வகுப்புக்குள் காலடி வைத்தான். ரங்கசாமி ஸாரின் ரௌத்திராகாரமான முகம் வரவேற்புக் கொடுத்தது.

''எங்கேடா வந்தே?''

''ஒரு நிமிஷம் லேட்டாயிடுத்து, ஸார். எக்ஸ்க்யூஸ் மி ஸார்!''

''நோ எக்ஸ்க்யூஸ். யூ கெட் அவுட்'' என்று கர்ஜித்தார் ஆசிரியர்.

''ஸார்..'' சந்துருவின் முகம் கெஞ்சியது.

''நோ பார்கைனிங். யூ கெட்டவுட், ஐ ஸே'' சந்துரு திரும்பிவிட்டான்.

மறுநாள் வகுப்பிலிருந்த நாற்பது பேரும் பத்து நிமிஷம் தாமதமாக வந்தார்கள், ரங்கசாமி ஸாரின் பிள்ளையைத் தவிர. பலன்..

* * *

சந்துருவின் நெஞ்சம் துடித்தது. குமுறிக் குமுறி அழுதான் அவன். அணைக்க ஒருவரும் இல்லை. இனிமேல் அக்டோபர் தானா? அடிநெஞ்சம் வர்மம் பாராட்டியது.

கையில் காவிக் குழம்புத் தகரத்துடன் புறப்பட்ட அவனைக் கண்டு நண்பன் திகைத்தான். இன்னும் என்ன ஆர்ப்பாட்டங்களைச் சந்துரு விளைவிக்கப் போகிறானோ என்று திகைத்தான். அமைதியான முகத்துடன் பள்ளிச் சுவரை அணுகினான் சந்துரு. ஐந்து நிமிஷங்களில் அழகான ஓவியம் ஒன்று உருவாகியது. ரங்கசாமி ஸாரின் வழுக்கை மண்டை சுவரில் 'கிளார்' அடிக்க ஆரம்பித்தது. படத்தினடியில், ''அநியாயத்தின்



வெற்றி. இது அடுக்குமா?'' என்று எழுதினான். பிறகு அருகிலிருந்த குட்டையில், டப்பாவை மூடி, வீசி எறிந்துவிட்டுச் சென்றான்.

* * *

பியூன் வழக்கம்போல் வகுப்பறைக்குள் வந்தான் கையில் சிறு காகிதத்துடன். ஆசிரியர், சந்துருவைத் தலைமையாசிரியர் அழைப்பதாகக் கூறினார் தலை குனிந்து சென்றான் சந்துரு.

தம் அறையில் முகத்தில் கோபம், கொப்புளிக்க அமர்ந்திருந்தார் தலைமையாசிரியர். அருகில் ரெட்டை மண்டை ஸாரின் நெடிய உருவம் அவனை என்னவோ செய்தது. இனந்தெரியாத எரிச்சலா அல்லது பயமா அது?

''ஏண்டா தடியா, தெருவில் பாரடா கொஞ்சம்.'' தெருவில் போவோர் வருவோரெல்லாம் படத்தைப் பார்த்துக் கூச்சல் போட்டுக்கொண்டு கும்பலாக நின்றுகொண்டிருந்தனர்.

''குருவுக்குச் செய்யும் மரியாதையாடா இது?'' சந்துருவுக்குப் பதில் சொல்லவேண்டியிருந்தது.

''நான் செய்யவில்லை, ஸார்!''

''பொய்வேறு சொல்கிறாயா? பள்ளி யூனியனின் காரியதரிசி பதவியிலிருந்து உன்னை 'டிஸ்மிஸ்' செய்கிறேன். பத்து நாளைக்குப் பள்ளிக்கூடம் வரமுடியாதவாறு 'சஸ்பெண்ட்' செய்கிறேன்.'' தண்டனை வழங்கியாகிவிட்டது. அவர் சென்றுவிட்டார். ''ஹ்ஹேன்னானும். பூச்சி காட்டுகிறாயாடா கழுதை?'' ஏளனச் சிரிப்புடன் நகைத்தார் ரங்கசாமி ஸார்.

'ஆதரவற்ற வீட்டிலும் அன்பற்ற ஆசிரியரிடமும் அடிமைப்பட்டுக் கிடப்பதா? வேண்டாம். வெளிச் செல்கிறேன், இனிச் சுதந்தரப் பாட்டையினிலே. பரந்த உலகம் என்னைத் திறந்த மனத்துடன் ஏற்றுக்கொள்ளும்.'

கையில் பையுடன், கண்ணுக்கெட்டிய தூரம்வரை நெளிந்து சென்ற பாட்டையினிலே, கனவேகமாக நடந்துகொண்டிருந்தான் சந்துரு.

உரசினாற்போல் வந்து நின்றது கார். அதிலிருந்து இறங்கினார்கள் சந்துருவின் அப்பாவும் 'சண்பகம்' பத்திரிகையின் ஆசிரியரும். அவர்தான் பள்ளி நண்பன் பாலனின் தந்தை. ''சின்ன விஷயத்துக்காகவா இவ்வாறு கிளம்பிவிட்டாய்? அசடு! நடந்ததெல்லாம் எனக்குத் தெரியும். உன்னிடம் திறமையிருக்கிறது. படிப்புடன் ஓவியக் கலையும் நன்கு பிரகாசிக்கிறது. உன் தலைமையாசிரியரைச் சரிப்படுத்த வேண்டியது என் பொறுப்பு. வீடு திரும்பு. சொல்கிறேன்'' என்று அதட்டினார் அவர்.

பலிக்குமுன் போகும் ஆட்டைப்போல - அல்லது - மாமனார் முன்னால் செல்லும் நாட்டு பெண்ணைப்போல, சந்துரு - 'சண்பக'த்தின் எதிர்காலத் தலைமை ஓவியர் -, காரினுள் ஏறினான்.

# எங்கும் ரிசல்ட்!

'நித்திலன்'

குறிப்பு: இந்தக் கட்டுரை எந்தத் தொழிலாளரையும் கேலி செய்வதற்காக எழுதப் பட்டதல்ல; நகைச் சுவைக்காகவே எழுதப்பட்டது.

பொழுது விடிந்தால் பள்ளிக் கூடத்தில் 'ரிசல்ட்'. நான் கவலையுடன் படுக்கையில் படுத்துக் கொண்டிருந்தேன். பொழுது விடிந்தால்..?

ஐயோ நான் பரீட்சையில் பெயில்! அப்பா என்னை நெட்டித் தள்ளி விட்டார். 'போடா, எங்காவது தொலை. என் முகத்தில் விழிக்காதே' என்று கர்ஜித்தார். நான் வீட்டை விட்டு வெளியேறி வீதியில் நடந்தேன். என் நண்பர்கள் அத்தனை பேரும் பெயில்! ஒவ்வொருவர் வீட்டிலும் என்ன நடக்கிறது என்பதை அறிய ஒவ்வொரு நண்பன் வீட்டு வாசவிலும் சற்று நின்றேன். பெயிலான என் நண்பர்கள் ஒவ்வொருவருடைய அப்பாவும் ஒவ்வொரு தொழில்காரர்கள்தான்.





1. ஹோட்டல் முதலாளி: அடீ மரகதம்! கேட்டாயோ உன் பிள்ளையாண்டான் சாமர்த்தியத்தை? பரீட்சையில் பெயில்! படிப்பில் ஒன்றுமில்லை, பெரிய சாப்பாட்டு ராமன் தான்!

2. விறகுக் கடைக்காரர்: பெயிலாப் போயிட்டானும்! என்னமோ பரீட்சையில் 'பிளந்து' கட்டியிருக்கிறேன்' என்று சொன்ஞனே?''

8. மரவாடிக்காரர்: பெயிலாப் போயிட்டியா? எங்கேயாவது தொலைந்து போடா மரமண்டை!

4. குயவர்: புள்ளை படிச்சுப் பாஸ் பண்ணுவான்னு எண்ணிக் கிட்டிருந்தேன். பெயிலாம்! அவன் தலைபில் களி மண்ணைத் தவிர வேறு என்ன இருக்கப் போகிறது?

5. சலவைத் தொழிலாளி: பரீட்சையெல்லாம் எப்படியடா எழுதியிருக்கிருய் என்று கேட்டதற்கு 'வெளுத்து வாங்கிவிட்டேன்' என்று சொன்ஞனே! கடைசியில் பெயில்தாஞ?

6. தையற்காரர்: அடியே, உன் பையன் பரீட்சையில் என்ன தெரியுமோ, கோட்டு!

7. கோழிப் பண்ணைக்காரர்: ப்பூ, இவ்வளவுதானு? எல்லாப் பாடங்களிலும் 'கோழி முட்டை' தான் வாங்கியிருப்பான். அதனுல் தான் பெயில்!

8. மளிகைக்கடை செட்டியார்: போடா விளக்கெண்ணே! பணத்தைக் கொட்டிப் படிக்க வைத்ததெல்லாம் வீணுகி விட்டதே!

9. ஐஸ்புரூட் கம்பெனிக்காரர்: பரீட்சையை 'ஜில்' லுன்னு எழுதியிருப்பானென்று நினைத்துக்கொண்டிருந்தேன். பெயிலாப்போயிட்டானு?

இதையெல்லாம் கேட்டதும் நான் உயிரோடு இருப்பதில் எனக்குச் சந்தேகம் வந்துவிட்டது.

''ஏண்டா பாலு, இது கனவா நனவா? எங்கே என்னைக் கிள்ளிப் பார், வலிக்கிறதா எனப் பார்க்கிறேன்'' என்றேன் என் நண்பனிடம்.

''ஆ, அம்மாடியோவ்'' என்று துள்ளிக் குதித்து உட்கார்ந்தேன், அட, இப்போதுதானே பொழுது விடிந்திருக்கிறது! அப்படியென்ருல் நான் கண்டது கனவுதானு?

அப்போது, ''ஏனடா குண்டு




10. வக்கீல்: 'ஏண்டா பெயிலாப் போயிட்டே'ன்னு கேட்டால் 'வாத்தியார் மார்க்குப் போடுவதில் கஞ்சன், அவருக்கு என்னைக் கண்டால் பிடிக்காது'ன்னு சட்டமல்ல பேசருன்?

11. கசாப்புக் கடைக்காரர்: 'பரீட்சையெல்லாம் கொன்னு எடுத்துட்டேன்'னு குதிச்சுக்கிட்டு இருந்தியே, இங்கே வா, உன்னை உரிச்சு எடுத்துப்பிடறேன்.

மணி, இன்னமும் என்னடா தூக்கம்? நான் உன்னை எத்தனை தடவை கிள்ளி எழுப்புவது?'' என்று சொன்னுன் என் நண்பன் பாலு.

அவன் சொன்னுன்: குண்டு மணி, உனக்கு விஷயம் தெரியுமா? நம் பிரண்ட்ஸ் அத்தனை பேரும் - நீ, நான் உள்பட - பாஸ் செய்து விட்டோம்! சற்று முன்தான் 'ரிசல்ட்' ஒட்டினுர்கள்.''

# நீல வண்ணத்திலே....

மூர்த்தி

புகைப்படக் கலையில் ஆர்வம் கொண்ட இளம் நிபுணர்கள் தாங்களாகவே தம் புகைப்படப் பிரதிகளை எடுத்துப் பார்க்க விரும்புவது இயற்கையே. அதுவும் சாதாரண நிழற்படங்களைப் போலல்லாமல் பல வண்ணங்களில் தம் திறனைக் காட்ட முடியுமானால் சந்தோஷமடைவார்கள். கீழே காணும் முறை தரைப்படப் பிரதிகள் எடுக்கவே பெரும்பாலும் பயன்பட்டு வரும் (Blue Printing) நீல வண்ணப் படங்களை அடிப்படையாகக் கொண்டது.

மற்ற முறைகளைப் போல் இதுவும் ரசாயனப் பொருள்கள் சிலவற்றின் மீது ஏற்படும் வெளிச்சத்தின் விளைவை அடிப்படைத் தத்துவமாகக் கொண்டுள்ளது. தேவையான ரசாயனப் பொருள்கள்: (1) பழுப்பு நிற 'ஃபெர்ரிக் அம்மோனியம் சிட்ரேட், (Ferric Ammonium citrate) இதைக் காற்றுப் புகாத வெளிச்சத்தால் பாதிக்கப் படாத சீசாக்களில் வைத்திருக்க வேண்டும்— (2) சிவப்பு நிறப் பொட்டாசியம் 'ஃபெர்ரி சயனைட், (Pottassium Ferri cynide). இவை சாதாரணமாகக் கெமிஸ்டுகளிடம் கிடைக்கக்கூடியவையே.

தேவையான சமயத்தில் இரண்டு கரைசல்கள் தயாரிக்கவேண்டும். ஒன்று, ஓர் அவுன்ஸ் சுத்த ஜலத்தில் நூறு *கிரெய்ன் ஃபெர்ரிக் அம்மோனியம் சிட்ரேட்; மற்றொன்று, ஓர் அவுன்ஸ் சுத்த ஜலத்தில் எழுபது கிரெய்ன் பொட்டாசியம் 'பெர்ரி சயனைட்.' இந்தக் கரைசல்களை உபயோகிக்கும் வரை வெளிச்சத்தினால் பாதிக்கப்படாதபடி பழுப்பு நிற சீசாக்களில் வைத்திருக்கலாம்.

'பிரின்ட்' எடுக்கும் பேப்பர் சுத்தமாக, வெள்ளையாக அழுக்கேறி யிராமல் இருக்கவேண்டும் என்று சொல்லத் தேவையில்லை. பேப்பரை வெளிச்சத்திற்கு உணர்வுள்ளதாக்கும் திரவம், முதலில் தயாரித்த இரண்டு கரைசல்களையும் சமமான அளவில் கலப்பதால் உண்டாகிறது. தேவையான அளவிற்கு இந்தத் திரவத்தைத் தயாரித்து அதைப் பிரதி எடுக்கும் பேப்பரின் மேல் ஒரே சீராகத் (uniform) தடவவேண்டும். இதற்கு 'ஸ்பான்ஞ்ச்' அல்லது துணி உபயோகிக்கலாம். தடவுவதை இருட்டறையிலோ அல்லது குறைந்த வெளிச்சத்திலோ செய்யலாம். ஆனால் பேப்பர் இருட்டில் தான் காயவேண்டும்.

புகைப்படப் பிரதிகள் எடுக்கத் தேவையான 'நெகடிவ்'கள்




---

*ஒரு கிராம்=15.
4 கிரைய்ன்;

(Negatives) கூடியவரை சரியான படி எடுக்கப் பட்டவையாக (Correctly exposed) இருத்தல் நலம்.

பிரதி எடுக்க உபயோகப்படும் அமைப்பு ஒன்றைப் படம் காட்டுகிறது. அமைப்பிலுள்ள கண்ணுடியின் பின்புறத்தில் நெகட்டிவையும் அதன்மேல் உணர்வுள்ள பேப்பரையும் சரியானபடி - அதாவது, நெகட்டிவ் 'பேப்பர் இவற்றின் இராசயனப் பக்கங்கள் சேர்ந்து இருக்கும்படியும், நெகட்டிவ் வெளிச்சத்தை நோக்கி இருக்கும் படியும் - வைத்துக் கண்ணுடியின் பின்புறத்தை அழுத்தமாக நன்ருக மூடிய பின்னர், ஃபிரேமை வெயிலில் வைத்துவிட்டால் தேவையான 'பிரின்ட்' பேப்பரில் பதியும். பிரதி தெளிவாக இருக்கவேண்டுமாஞல் நெகட்டிவும் பேப்பரும் ஒன்றை ஒன்று நன்ருகத் தொட்டுக்கொண் டிருக்கும்படி அழுந்தியிருக்கவேண்டும். தேவையாஞல் பின்புறக் கதவுகளேப் பக்கச் சட்டங்களுடன் பொருத்த, கிளிப்புகளேயும் உபயோகிக்கலாம்.

பேப்பரை வெயிலில் காட்ட வேண்டிய நேரம், நெகட்டிவைப் பொருத்தும் சமயத்தைப் பொருத்தும் மாறுபடுகிறது. சாதாரண நாட்களில் மத்தியான்னத்தில் ஐந்து முதல் பத்து நிமிஷங்களும் காலே மாலே நேரங்களில் நல்ல வெயில் இருந்தால் இன்னும் சற்று அதிகமாகவும் ஆகும்; மேகங்கள் சூழ்ந்த நாட்களில் அரை மணிவரைகூட ஆகிவிடும்.

வெயிலில் காட்டப்பட்டபின் பேப்பரைக் குறைந்த வெளிச்சமுள்ள ஓர் இடத்திற்கு எடுத்து வந்து நெகட்டிவை அப்புறப்படுத்தி விட்டு, பேப்பரை இரண்டு மூன்று தடவை புது நீர் கொண்டு கழுவவேண்டும். நீர் பட்டவுடன் பிரதி தெளிவாக வெள்ளேயும் நீலமுமாக இருக்கும். கழுவப் பட்ட படங்களே நீர் வடிந்து நன்கு காய வைத்தபின்னர் உங்கள் ஆல்பத்தில் ஒட்டி விடலாம்.

பிரதிகள் அலம்பும்போது அழிந்து போவதுபோல் தோன்றிஞல் அது வெயிலில் குறைந்த நேரம் காட்டப்பட்டதற்கு அறிகுறியாகும்.

படங்கள் எடுப்பதைத் தவிர அழைப்புகள், வாழ்த்து மடல்கள் இவற்றையும் பிரதி எடுக்கலாம். அப்போது உங்களுக்குத் தேவையானவற்றை ஒரு 'டிரேஸிங்' காகிதத்தில் இந்தியன் இங்க் கொண்டு எழுதி அதை நெகட்டிவுக்குப் பதிலாக உபயோகிக்க வேண்டும். உங்களுடைய படத்தையோ அல்லது அறிமுகமான முகங்களேயோ, இடங்களேயோ இத்துடன் சேர்ப்பதால் வாழ்த்து மடல்களே உயிருள்ளவையாக ஆக்கலாம்.

பல நிற பேப்பர்களே உபயோகித்துப் பிரதிகளே பலபல நிறங்களில் எடுக்கலாம். உதாரணமாக மஞ்சள் நிற பேப்பரில், 'பிரிண்ட்' பச்சை நிறத்தில் இருக்கும்.

கடைசியாக ஒரு வார்த்தை: இந்த முறையில் உபயோகிக்கப்படும் ரசாயனப் பொருள்கள் உடலுக்குத் தீங்கு செய்யக்கூடியவை; தவிரவும் அவை உடைகளின்மீது பட்டால் கரை ஏற்படும் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

---

## கண்ணன் கழகம்

### அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லே)

பெயர் ....................

விலாசம் ....................

....................

பிறந்த தேதி ..............

(தேதி, மாதம், வருஷம்

# மாய ஊசிகள்

ஆர். வஜ்ரேசுவரி

தேவலோகத்துக்குக் குழந்தைகள் குதித்து விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களுக்கு ஒரே சந்தோஷம்! அவர்கள் தாயார் வசந்தை, அன்று இரவு அவர்களுக்குப் புது ஆடைகள் தைக்கப்போவதாகச் சொல்லியிருந்தார்கள். விளையாட்டு முடிந்ததும் குழந்தைகள் தாயைச் சூழ்ந்துகொண்டார்கள்.



''அம்மா, எனக்கு நட்சத்திரங்கள் வைத்த அங்கிதான் வேண்டும்'' என்றது ஒரு குழந்தை.

''போன ஆண்டு எனக்கு வானவில்லின் வர்ணங்கள் நிறைந்த பாவாடை தைத்துக் கொடுப்பதாகச் சொன்னது ஞாபகமிருக்கிறதா அம்மா?'' என்ருள் ஒரு பெண்.

''அம்மா, அம்மா'' என்று வசந்தையின் கழுத்தைக் கட்டிக் கொண்டாள் கடைக்குட்டி. ''எனக்குச் சிலந்தியின் வலை போன்ற மெல்லிய அங்கிதான் வேண்டும்'' என்று கெஞ்சினுள் அவள்.

குழந்தைகளின் உற்சாகத்தைக் கண்ட வசந்தைக்கு ஒரே ஆனந்தம். ''அதோ, பாருங்கள்... பூக் குவியல்கள்! பலரக வண்ண நூல் கண்டுகள்! எல்லாம் தயாராக இருக்கின்றன. ஊசிகள்தான் வரவேண்டும். உடனே என் வேலை முடிந்துவிடும். நீங்கள் போய்த் தூங்குங்கள். ஊசி வண்டி வரும் நேரமாயிற்று. உங்களுக்குத் தெரியுமே. நான் உபயோகிக்கும் ஊசிகள் மாய ஊசிகள் - ஓர்

ஊசியில் ஓர் உடைதான் தைக்க முடியும்..''

''தேவி, கேட்டீர்களா விஷயத்தை?'' என்று பரபரப்புடன் உள்ளே நுழைந்தாள் ஒரு தோழி.

''ஊசி வண்டி வந்துவிட்டதா?''

''தேவி, ....வண்டிதான் வந்திருக்கிறது..ஊசிக் கட்டுகள் வரவில்லை - வழியில் திருடர்கள் கொள்ளையடித்துவிட்டார்களாம்'' என்று பதிலளித்தாள் மல்லிகா.

''என்ன? வழிப்பறிக் கொள்ளையா? யாருக்கு அவ்வளவு தைரியம்? தேவதைகளின் பொருளைத் திருடுவதா?..வண்டிக்காரர்கள் என்ன சொன்னார்கள்?''

பக்கத்துக் காட்டின் வழியே வண்டி வரும்போது - தட தட வென்று பல மரங்களிலிருந்து திருடர்கள் குதித்து வண்டியைச் சூழ்ந்து கொண்டார்களாம். வண்டிக்காரர்கள் இருவரையும் கட்டிப்போட்டு விட்டு ஊசிக் கட்டுகளுடன் காட்டில் மறைந்து விட்டார்களாம். எல்லாம் அந்தக் குள்ளர்களின் வேலை தான். ஊசியைக் கொண்டு தங்கள் குழந்தைகளுக்கு ஆடைகளைத் தைத்து விடுவார்கள்.''

எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே ஏமாற்றம். ஆண்டுக்கு ஒரு முறைதான் இந்த மாய ஊசிகள் கிடைக்கும். ஊசிகள் இல்லாமல் உடைகள் தைக்க முடியாது. ஆதலால் இந்த ஆண்டு விழாவிற்குப் புத்தாடை கிடையாது. இன்னும் ஓர் ஆண்டு காத்துக்கொண்டிருக்க வேண்டும்.

வசந்தைக்கு மிகவும் வருத்தம். குழந்தைகளின் ஏமாற்றம் அவள் மனத்தை வாட்டியது. ''குழந்தைகளே, இதோ சீக்கிரத்தில் அடுத்த ஆண்டு வந்துவிடும். உங்களுக்கு இரண்டு உடைகள் தைத்துக் கொடுக்கிறேன். நீங்கள் போய்த் தூங்குங்கள். திருடர்களுக்குச்—சரியான தண்டனை கொடுக்கிறேன்'' என்றாள்.

இந்தக் கொள்ளையைப்பற்றி அறிந்தவுடன் அரசன் தன் வீரர்களைக் காட்டிற்கு அனுப்பினான். குதிரைகளின் மேல் ஏறிச்சென்ற வீரர்கள் காட்டின் பல பகுதிகளிலும் திருடர்களைத் தேடினார்கள்.

ஊசிகளைத் திருடிய குள்ளர்கள் தங்கள் குழந்தைகளுக்கு உடை தைப்பதற்குத் துணி, சேகரிக்க வேண்டுமே என்று யோசித்தனர். காட்டில் கேட்ட குளம்போசை அவர்களைத் தூக்கிவாரிப்போட்டது. ஒருவன் மரத்தின்மேல் ஏறிப் பார்த்தான். வெகு தொலைவில்



தமிழ்நாடு ... கற்பக நூலகம் சென்னை-600 ...




வீரர்கள் வருவது தெரிந்தது - பரபரப்புடன் கீழே இறங்கி வந்தான்.

பின்னர், "ஆளுக்கு ஒரு கட்டு ஊசியை எடுத்து, இருக்கும் புதரில் ஒளித்து வைப்போம்" என்றான்.

இன்னொருவன், "அந்தப் புதரி லிருக்கும் இலைகள் அகலமாயிருக் கின்றன. தண்ணீர்ச் சத்தும் நிறைந்தவை. ஆதலால் ஊசிகளை இலைகளில் குத்தி வைத்து விடலாம். வீரர்கள் போன பிறகு அவைகளைச் சேகரித்துக் கொள்ள லாம்" என்றான்.

"இதுவே சரியான வழி...." என்று எல்லோரும் ஏற்றுக்கொண் டனர்.

பரபரவென்று புதரிலிருந்த செடிகளில் எல்லாம் ஊசிகளைக் குத்திவைத்தனர். பிறகு அருகி லிருந்த மரங்களில் ஏறி ஒளிந்து கொண்டார்கள்.

அரசனின் வீரர்கள் தேடிக் கொண்டே வந்தனர். தூரத்தில் ஒரு பை தெரிந்தது. ஒருவன் அதைக் கையில் எடுத்துப் பார்த் தான். "இதோ, ஊசிக்கட்டுகள் வந்த பைகளில் ஒன்று திருடர் கள் இங்கேதான் இருக்கவேண் டும்" என்றான்.

பையை வாங்கிப் பார்த்த மற்றொரு வீரன், 'தேவதைகள் ராணி வசந்தை அவர்களுக்கு' என்று எழுதியிருந்த விலாசத்தைப் படித்தான்.

"இதோ பார்! ஊசிக் கட்டு களின்மேல் காணப்படும் முத்திரை யும் இருக்கிறது" என்றான் முதல் வீரன்.

சுற்றிலும் தேட ஆரம்பித்த னர் வீரர்கள்.

கடைசியில் ஊசிகள் எல்லாம் குத்தப்பட் டிருந்த புதர்களைக் கண்டனர்.

ஓர் இலையிலிருந்த ஊசிகளை எடுக்க முயன்ற ஒருவன் கையில் ஊசி குத்தியதால் ரத்தம் சொட்ட ஆரம்பித்தது. "அழ கான சிவப்புப் பழங்கள். இவை களிலும் ஊசிகள்! இந்தப் பழம் மிகவும் ருசியாயிருக்கும். இதை இனிமேல் சாப்பிட முடியாது" என்றான் ஒரு சாப்பாட்டு ராமன்.

வீரர்களின் தலைவனுக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. தேவலோகக் குழந்தைகளுக்கு எவ்வளவு வருத்தமும் ஏமாற்ற மும் ஏற்பட்டிருக்கிறது! இங்கே இந்த ஊசிகளை வீணாக்கி இருக் கிறார்கள்! ஒரு முறை உப யோகித்துவிட்டால் இந்த மாய ஊசிகள் பயனற்றுப் போகும் என்று இந்தத் திருடர்களுக்குத் தெரியாது. இவர்களைப் பிடித்துச் சரியான தண்டனை கொடுங்கள்" என்று கட்டளையிட்டான்.

வெகு சீக்கிரத்தில் மரங்களில் ஒளிந்துகொண் டிருந்த குள்ளர்கள் பிடிபட்டனர்.

"திருடர்களை இந்தப் புதரில் பிடித்துத் தள்ளுவதே ஏற்ற தண்டனை" என்றான் தலைவன்.

குள்ளர்களின் உடலெங்கும் ஊசிகள் குத்தின. அவர்கள் வேதனை பொறுக்க முடியாது தவித்துப் பின்னர் மன்னிப்புக் கேட்டு விடுதலை பெற்றனர்.

அன்று குள்ளர்கள் இலைகளில் குத்தி வைத்த ஊசிகள்தான் இன்றும் சப்பாத்திப் புதர்கள் என வழங்கப்படுகின்றன.


கடலிலே சாகாமல் கடைசியில் இவர்களிடமா அகப்பட்டுக் கொண்டேன்!
ஹஹ் ஹஹ்ஹா!
அன்று முதல் மெல்ல மெல்ல அந்தத் தலைவன் அன்புக்குப் பாத்திரமாகி, அவர்கள் மொழியைக் கற்று வரும் நாளில்தான் . . . . . . .
நீயும் கடற்புலியும் இங்கே வந்தீர்கள்!
அப்புறம் நீங்கள் விட்டுவந்த பல்லவியையும் உங்கள் குமாரரையும் பார்க்கவேயில்லையா?
பொறு கிழந்தாய், பொறு! என் மனைவியை நான் பார்க்கவில்லை. ஆனால் என் செல்வத்தைக் கண்டேன்
கண்ணீர்களா? எங்கே? இப்போது அவர் எங்கே இருக்கிறார்?
அதோ பார் அவனை நான் எப்போது கண்டேன் என்பது உனக்கே தெரியும்!


இவர்கள் பேச்சு முடிவடைவதற்குள் கலம் மணி பல்லவத் தீவை அடைகிறது! போர்ச்சங்கு முழங்க, எக்காளம் திசை யதிர, மணி பல்லவத்தின் காவல் கலம் நெருப்புப் பந்தம் கட்டிய அம்புகளைப் பொழிகிறது.
போர் வீரர்களுக்கும் மாலுமிகளுக்கும் கடற்புலி கட்டளையிட்டவாறு.....
கலத்தைக் கிழக்காகத் திருப்புங்கள். மேல்புறப்படை மட்டும் எதிர்த்துத் தாக்கட்டும்! கீழ்ப் புறத்துப் படை வாளிகளில் தண்ணீர் எடுத்து நெருப்பை உடனுக்குடன் அணைக்கட்டும்!
மணி பல்லவத் தீவின் போர்க்கலப் படை மற்றொரு கலத்தில் அதன் தலைவன் தலைமையில் அருகில் வருகிறது.
அதோ! அந்தத் தலைவன்!
கடற்புலி ஒரு படகிலே குதித்து, அந்தக் கலத்தை நோக்கிச் செல்ல எத்தனிக்கும் போது.....

(தொடரும்)

## 11. எதிராஜின் சவால்!

பட்டாபியும் ஹெட்கான்ஸ்டபிள் சாமிக்கண்ணும் சாதாரண உடையிலேயே கிளம்பி, முதலில் விநாயகத்தின் வீட்டிற்குப் போவதென்று தீர்மானித்தார்கள்.

அவர்கள் விநாயகத்தின் வீட்டிற்குச் செல்லும்பொழுது வெகு நேரம் ஆகிவிட்டது. வீட்டின் வாசற்கதவு சாத்தியிருந்தது. அவர்களுக்குத் தெரியும், விநாயகம் இருக்கமாட்டானென்று. விநாயகத்திற்குப் பகல் 'ட்யூடி' ஸ்டேஷனில் இருக்கிறதே! விநாயகத்தின் மனைவி செல்லாயியின் வாயைப் பிடுங்கி ஏதேனும் விஷயத்தைத் தெரிந்துகொள்ளலாமென்றுதான் வந்திருந்தார்கள். ஸ்ரீதரனிடமிருந்து மூட்டையைக் கூர்க்காவிடம் பிடுங்கிக் கொடுத்தது விநாயகம்தான் என்று தெரிந்துகொண்ட பின் பட்டாபிக்கு, விநாயகத்தின் பேரில் ஒரு சந்தேகம் உண்டு, கதவைத் தட்டினர் ஹெட்கான்ஸ்டபிள். பட்டாபி அங்கே ஒரு நோட்டம் விட்டார். திண்ணையில் கிடந்த வெள்ளைக் கைக்குட்டை அவர் கவனத்தைக் கவர்ந்தது. அதை எடுத்து ஜாக்கிரதையாகப் பைக்குள் வைத்துக்கொண்டார். 'யாரோ வந்துவிட்டுப் போயிருக்கிறார்கள்' என்று மட்டும் அவருடைய உள்ளுணர்வு கூறியது. கதவைத் தட்டிய சிறிது நேரத்திற்குப் பிறகுதான் செல்லாயி கதவைத் திறந்தாள். கதவைத் திறந்ததும் அலுப்புடன், ''யாரையா நீங்க?'' என்றாள். இருவரும் சாதாரண உடையில் இருந்ததால் அவர்கள் இருவரும் அந்தக் 'கறுப்புக் கண்ணாடி' ஆளினால் அனுப்பப்பட்டவர்கள் என்றுதான் அவள் நினைத்தாள். அதனால் எப்படியும் ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டாள்.

''ஏம்மா, விநாயகம் இருக்கிறாரா? கூப்பிடுங்க..''

''யாரது விநாயகம்?'' என்று கேள்விக்குறி போட்டாள் அவள்.

''கான்ஸ்டபிள் விநாயகம் தான்...''

''அப்படி இங்கே ஒருத்தரும் இல்லையே!''

''இது கான்ஸ்டபிள் வீடு இல்லையா?''

''இல்லீங்களே! உங்களுக்கு யார் சொன்னது?''

ஹெட்கான்ஸ்டபிள் பட்டாபியைப் பார்த்தார். பட்டாபி ஹெட்கான்ஸ்டபிளைப் பார்த்தார். பட்டாபி அதற்குள்முன்னே வந்து, தாழ்ந்த குரலில், ''இந்தா அம்மா, நிசமாச் சொல்லுங்க. இது விநாயகம் வீடு இல்லே? நாங்களும் அவரைச் சேர்ந்தவங்க தான்!'' என்றார். செல்




பரிசுபெற்ற தொடர்கதை:

லாயி திகைத்தாள். பட்டாபி விட வில்லே. "எங்களுக்கு எல்லாம் தெரியும். ஏன் பொய் சொல் றீங்க...நேத்திக்கிக்கூட இங்கே அவரைப் பார்த்தோம். நேத்து ராத்திரி அவரோடு நாங்களும் தான் போனேம், அந்த டிரஸ்ஸைப் பிடுங்க...."

"அப்பா!.." பெருமூச்சு விட்டுக்கொண்டே, "நீங்களா?.. அவரு இல்லே. அவர் வந்தப்புறம் வாங்களேன்..."

"எங்கே போயிருக்காரு அவரு?"

"ஸ்டேஷனுக்குத்தான்?"

"இல்லியே! அவருக்கு 'ட்யூடி' இப்ப ஏது?"

"எனக்குத் தெரியாதுங்க.."

பட்டாபியும் ஹெட்கான்ஸ் டபிளும் ஆங்கிலத்தில் அவளுக்குப் புரியாதபடி பேசிக்கொண்டார் கள்.

கடைசியாக, "ராத்திரி, அவரு வர ரொம்ப நேரமாயிடுச்சோ?" என்று கேட்டார் சாமிக்கண்ணு.

"ஆமாங்க! ரொம்ப நேரம் ஆச்சு.." என்ருள் செல்லாயி.

"எல்லாத்தையும் பத்திரமாக் கொண்டு வந்தாருல்லே?" என்று தாழ்ந்த குரலில் சைகைகளுடன் கேட்டார்.

செல்லாயிக்குப் பயம்தான். தலையை மட்டும் ஆட்டி ஆமோதித் தாள்.

"பத்திரமா இருக்கா?" என்று கேட்டார் பட்டாபி. செல்லாயி பயந்து போனுள்.

"ஐயோ! எனக்குத் தெரியா துங்க..அது அவர் விஷயம்.. இங்கே வூட்டிலே ஒண்ணும் சொல் றது இல்லீங்க. வைக்கறது மில்லே."

"நாங்க அவரோட சிநேகிதர் கள்தான். எல்லாரும் ஒரே இலாகாவில் வேலே செய்கிறவர் கள்தான். நேத்து மூணு பேருந் தான் போனேம்...."

"அது சரிங்க! நமக்குத் தெரியா துங்க. ராத்திரி போனுரு. வரும் போது மூட்டையோடு வந்தாரு." ஏதோ தவறு செய்து விட்டவள்போல் சட்டென்று செல் லாயி நாக்கைக் கடித்துக்கொண் டாள்.

"சரி! நாங்க வர்ருேம்...அப் புறம் வந்து பார்க்கிருேம்" என்று சொல்லிவிட்டுக் கிளம் பினர்கள். அவர்கள் கிளம்பிய தும் படீரென்று கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே போனுள். ஆனல் மறுகணமே அந்த வீட் டுக்கு இன்னெரு சைக்கிள் வந்தது. வந்தவன் கைக்குட்டையை நழுவ விட்டுப் போனவன். 'பட பட' வென்று கதவைத் தட்டினன் அவன். பட்டாபியும் ஹெட்கான்ஸ் டபிளும் இன்னேர் ஆள் வருவ தைக் கவனித்து விட்டார்கள். மறைவாக இருந்து கவனித்தார் கள். அவன் 'பட பட'வென்று ஆத்திரத்தோடு தட்டியதுதான் மிச்சம். கதவு திறக்கப்படவே இல்லே. பல்லேக் கடித்தான் கொஞ்ச நேரம். அப்புறம் என்ன தோன்றியதோ, பேசாமல் திரும்பி ஞன். அவன் உள்ளே போனதை யும் வெளியே வந்ததையும் மட்டுந்தான் பட்டாபி கவனித் தார். வந்தவன் யாரென்று அவருக்குத் தெரிந்துவிட்டது. அது அந்தக் கறுப்புக் கண்ணுடி ஆள்தான்! ஆனல் 'கறுப்புக் கண்ணுடி' இல்லாமல் அவனே முதல் தடவையாக அப்பொழுது தான் பார்க்க நேர்ந்தது. ஒரு கணந்தான். ஆனல் மறுகணம், பைக்குள்ளிருந்து அவன் 'கறுப்புக் கண்ணுடி'யை எடுத்து மாட்டிக் கொண்டு சைக்கிளில் ஏறிப் போய் விட்டான்.

* * *

அதே சமயம் ஸம்பத்தும், ஸ்ரீதரனும் திருவல்லிக்கேணி மாடர்ன் ஸில்க் ஹவுஸுக்குப் பக்கத்திலிருந்த முதலியாரின் பங்களாவில் இருந்தார்கள். அப் பொழுதுதான் ஸம்பத், முதலியாரி டம், "அந்த அறைக்குள் வரும் வழியைக் கண்டுபிடித்து விட்டேன், ஸார்!" என்று சொன்னுன். அந்த யோசனே ஸ்ரீதரனுக்குத் தான் உதயமாகியது. ஸ்ரீதரன் அதைச் சொன்ன பிறகு ஸம்பத் திற்கு அது ஊர்ஜிதமாகிவிட்டது.

'அப்படித்தான் இருக்கவேண்டும்' என்று நிச்சயம் செய்துவிட்டான். மறுபடி அறைக்குள் வந்தான். அறையின் ஜன்னல் சாத்தியிருந்தது. ஜன்னலின் கதவுகளைத் திறந்து வெளிச்சத்தை உண்டாக்கினான். பிறகு எப்படியோ ஜன்னலைத் தூக்கினான் மேலே. ஜன்னல் 'கிரு கிரு' வென்று மேலே உயர்ந்தது. முதலியார், 'ஹா!' வென்று வாயைப் பிளந்தார். அவருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை!

"தம்பி! இது என்ன, ஆச்சரியம்!.." என்றார்.

"எனக்குந்தான் ஆச்சரியமாக இருக்கிறது!"

"புது வீடுதானே இது?" என்று கேட்டான் ஸ்ரீதரன்.

"ஆமாம்! கட்டி ஒரு வருஷந்தானே ஆகிறது!.."

"நினைத்தேன். இவர்கள் முறையே புதியதாக இருக்கிறது. வீடு கட்டும்பொழுதே இப்படி அமைத்து விட்டார்கள் போல் இருக்கிறது!"

"என்னமோ! நான் இதைக் கவனிக்கவே இல்லை.."

"இன்னும் சிறிது நாட்கள் இதைக் கவனியாதது போலவே இருந்துவிடுங்கள்" என்றான் ஸம்பத்.

முதலியார் புன்னகை செய்தார். "தம்பி! எப்படியாவது அந்த ஆளை ஒழிச்சுக்கட்டணும்!"

"அதைப்பற்றிக் கவலையே படாதீர்கள். நான் சொன்னபடி இங்கே ஓர் ஆள் இருந்து கவனித்துக்கொள்ளச் சொல்லுங்கள். ஏதேனும் முக்கியமான விஷயம் இருந்தால் 'போன்' செய்யுங்கள். அப்பா எல்லாம் கவனித்துக் கொள்வார்."

ஸ்ரீதரனும் ஸம்பத்தும் அங்கிருந்து நேராகக் கறுப்புக் கண்ணாடி ஆளின் பங்களாவுக்குப் போவதற்குத்தான் அவர்கள் திட்டம் போட்டிருந்தார்கள். அங்கிருந்து வெளியே வந்ததும் ஸம்பத், "ஸ்ரீதரா! நல்லவேளை, ஞாபகப்படுத்தினாய்!....அந்தக் 'கறுப்புக் கண்ணாடி' ஆள் பலே கைகாரன். எப்படி ஜன்னலை அமைத்திருக்கிறான் பாரேன்!"

"இது என்ன பைத்தியக்காரத்



தனம், ஸம்பத்! எப்படி அவன் அந்த ஜன்னலை அமைத்திருக்க முடியும்? அதை அமைக்கும் வரையில் இவர்கள் என்ன செய்தார்கள்?''

''அதுதான் சாமர்த்தியம். புது வீடு கட்டும்பொழுதே, இந்த ஏற்பாடு செய்கிறார்கள் இந்த ஆட்கள். 'கண்டிராக்டர்கள்' இவர்களுக்கு அடிமை. வீடு கட்டும்பொழுதே ரகசியமாக இந்த வழியை வைத்து விடுகிறார்கள். இது இவர்கள் கொள்ளையடிக்கச் சௌகரியமாகி விடுகிறது.''

இருவரும் நடந்தே ஒரு ஹோட்டலின் வாசலுக்கு வந்தார்கள். இருவருக்கும் நல்ல பசி.

ஹோட்டலில் இருவரும் சாப்பிட்டுக்கொண்டே பேச்சைத் தொடர்ந்தார்கள்.

''ஸ்ரீதரா! இன்னொரு விஷயம். இந்த 'மாடர்ன் ஸில்க் ஹவு'ஸில் தங்கள் வேலைகளைத் தொடர்ந்து நடத்த அவர்கள் ஏற்பாடு செய்கிறார்கள். இதுவரை நடத்தியும் வந்திருக்கிறார்கள்.''

''ஆனால் மாடர்ன் ஸில்க் ஹவுஸில் இனிமேல் நடக்காது. ஏனெனில் கூர்க்கா ஓடிவிட்டான். முதலியார் கவனித்துவிட்டார் என்று அவனுக்கும் தெரிந்து விட்டதாகத் தெரிகிறது.''

''அது எனக்கும் தெரியும். ஆனால் நான் சொல்கிறது வேறொரு விஷயத்தின் அடிப்படையில்..''

''அதாவது..?'' என்று இழுத்தான் ஸ்ரீதரன்.

''நான் புதிய விஷயம் சேகரித்தாகி விட்டது. அந்த ஜன்னலை அவர்கள் ஒவ்வொரு கணமும் கவனித்து வருகிறார்கள். அந்த 'வேர்க்கடலை'க்காரப் பையன்தான் அதைக் கவனித்து அவர்களுக்குச் சொல்கிறான்.''

''அப்படி இருந்தாலும் அங்கே கூர்க்கா இல்லையே!''

''அவன்தான் இனிமேல் தேவையில்லையே!''

சுவாரஸ்யமாகச் சாப்பிட்டுக் கொண்டே பேசினார்கள். தாழ்ந்த குரலில்தான் பேசினார்கள். ஆனால் அவர்கள் பேச்சைப் பின்னாலிருந்து ஓர் ஆள் கவனித்துக்கொண் டிருந்தான். அவன் அதற்குமேல் அவர்கள் பேச்சைக் கேட்காமல் 'விருட்' டென்று எழுந்து சென்றான். அவன் 'பில்'லுக்குப் பணம் கொடுக்கும்பொழுது ஸம்பத்தின் கண்கள் அவனைப் பார்த்து விட்டன. தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு! ஆனால் அது ஒரு கணம்தான். மறுகணம் எதையோ நினைத்துப் பார்த்துத் தன்னுடைய முகபாவத்தை மாற்றிக்கொண்டான். ஸ்ரீதரன் அதைக் கவனிக்கவில்லை.

* * *

எதிராஜ் தனது அறையில் உட்கார்ந்து ஏதோ யோசனையில் ஆழ்ந்து போயிருந்தான். அப்பொழுதுதான் துரை வெளியே கிளம்பிப் போனான். துரையிடம் வெளிப்படையாக, ''எனக்கு என்ன பயம்?'' என்று சொன்னானே தவிர உள்ளூர அவனுக்குப் பயம் தான். அதுவரை எதிர்பார்க்காத ஒரு பெரிய ஆபத்து அவனை நோக்கி வருவதுபோல் இருந்தது. அதுவும் முதல் நாள் நடந்த ஒவ்வொரு சம்பவத்தையும் நினைத்துப் பார்க்கப் பார்க்கக் கலவரம் அதிகமாகியது. மேஜையிலேயே உட்கார்ந்துகொண்டு யோசனை செய்து செய்து அலுப்புத் தட்டியது. நகத்தைப் பல்லால் கடித்துக் கடித்துத் துப்பினான். முதல் நாள் கேட்ட வெடிச் சத்தம் எப்படி உண்டாகியது என்ற கவலை அவனை வாட்டியது. வெளியே சென்ற துரை நல்லபடியாக அந்த இரும்புப் பெட்டியுடன் திரும்பி வர வேண்டும். அவனுடைய பீரோவிலிருந்து சாவிக்கொத்தும் அவனுடைய முக்கியமான சில கடிதங்களும், அந்த 'டயரி'யும் காணாமல் போய்விட்டது. அவன் சாவிக்கொத்தைப் பற்றிக்கூடக் கவலைப்படவில்லை. அந்த 'டயரி'யில் முக்கியமான சில விஷயங்கள்—அந்தரங்கமான விஷயங்கள் சில இருந்தன. அது அவனுக்குக் கொஞ்சம் கவலையைக் கொடுத்தது. அதை மீட்க வேண்டும். திறந்திருந்த ஜன்னல் வழியே கடைக்கண்ணால் தோட்டத்தைக்



கவனித்தான். யாரோ வருவது தெரிந்தது.

"கல்கத்தா! கல்கத்தா! கதவைத் திறந்துவிடு; துரை வருகிறுன்." துரை வேகமாக வந்தான்.

துரை உள்ளே வந்து 'தொப்'பென்று நாற்காலியில் விழுந்தான். "எங்கே பெட்டி?"-ஆவலோடு கேட்டான் எதிராஜ்.

"முதலில் விநாயகத்தின் வீடே தெரியவில்லை. எங்கிருந்து வரும் பெட்டி?.."

"ஏன் தெரியவில்லை? அன்றைக்கு நீ தானே அந்த 'டிரஸ்' களைக் கொண்டு வந்தாய்?"

"இப்பொழுது அந்த வீட்டில் இருக்கும் பெண்மணி அது விநாயகத்தின் வீடே இல்லை என்கிருள்..."

"ஆளைப் பார்த்தால் அடையாளங்கூடவா தெரியவில்லை?"

"அன்றைக்கு இருட்டில் பார்த்தது அவன் மனைவியை. வீடும் சரியாக ஞாபகம் இல்லை.."

"ஆமாம், உனக்கு எதுதான் ஞாபகம் இருக்கிறது? நானே போய் வருகிறேன், பார்!"

"கிழித்துவிடுவாய். பார்க்கிறேன்!" என்றுன் துரை.

எதிராஜ் ஆத்திரத்துடன், 'நீ கிழிக்காததை நான் கிழிக்க முடியும்!'' என்று கையை வீசினுன்.

"பார்த்துக்கொண்டே இரு. ஊரைவிட்டு ஓடவேண்டிய நிலைமை வந்துவிட்டது. யார் கண்டார்கள்?..எப்படி முடியுமோ?"

"ஆமாம்; ஒவ்வொரு தடவையும் இப்படியேதான் நீ சொல்கிருய்."

"அந்த இரண்டு பயல்களுக்கும் எல்லா விஷயமும் தெரிந்துவிட்டது. சாவிக்கொத்தும் டயரியும் அவர்கள் கையில். இன்னும் என்ன வேண்டும்?"

"அதனுல் என்ன?.."

"இப்பொழுதுதான் ஹோட்டலில் அந்தப் பயல்களைக் கவனித்தேன். முதலியார் வீடு, கூர்க்கா விஷயங்கள் எல்லாம் அவர்களுக்குத் தெரிந்துவிட்டன."

"ஹஹ்..ஹஹா! கூர்க்கா மறைந்து போய்விட்டான் இப்போது!"

"ஆனுல் கறுப்புக்கண்ணுடி எதிராஜ் மறைய முடியாது அவர்கள் கண்களிலிருந்து.."

"அப்படியென்றுல்.."

"உன்னையும் சந்தேகப்பட ஆரம்பித்துவிட்டார்கள் அவர்கள் என்று சொல்கிறேன்.."

"வாண்டுப்பயல்கள் என்ன செய்துவிடுவார்களாம்? .... ஒரே நசுக்கில்!.."

"அவர்கள் யாரென்று தெரிந்தால் இப்படிச் சொல்லமாட்டாய்?..ஸப் இன்ஸ்பெக்டரின் மகன் ஒருவன்.."

"அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. வேண்டுமானுல் மாலையே அந்த இருவரையும் கொண்டுவந்து இங்கே நிறுத்திவிடுகிறேன்."

"மாலை என்ன? அதோ..பார்!"

மாடியிலிருந்து ஜன்னல் வழியாகத் துரை சுட்டிக் காட்டிய இலக்கில் இரண்டு பேர் வந்துகொண்டிருந்தார்கள். அது ஸம்பத்தும் ஸ்ரீதரனும்தான்! எதிராஜ் வெளியே சென்றுன்.

(தொடரும்)

# கன்றுக்குட்டி

ஜி. ஜயராமன்

பொழுது விடிந்தது. காக்கை, குருவி எல்லாம் காச்சு மூச்சென்று கத்திக்கொண்டு வெளியே கிளம்பி விட்டன. கொட்டிலில் இருந்த எல்லாக் கடா மாடுகளையும் பசு மாடுகளையும் மாட்டுக்காரன் அவிழ்த்துக்கொண்டு போய் விட்டான். என்னை மாத்திரம் அங்கேயே கட்டிப் போட்டுவிட்டான். ஏன் இந்த ஓர வஞ்சனை? கேட்கிறேன்! எனக்கு மாத்திரம் கண்கள் இல்லையா? கறுத்த மூக்கு இல்லையா, நீண்ட காது இல்லையா? எனக்கென்ன நடக்கத் தெரியாதா இல்லை, ஒட்டி உலர்ந்த வயிறு தான் இல்லையா? இதெல்லாம் ஏன் இந்த மனிதர்களுக்குத் தெரியாமல் போயிற்று? எனக்குக் கோபம் கோபமாக வந்தது. கோபத்தில், 'அம்மா!' என்று கத்தினேன்.

உள்ளேயிருந்து ஓடி வந்தான் சுண்டுப் பயல். 'அவன் யார் அந்தச் சுண்டு?' என்று கேட்கிறீர்கள்? அவன்தான் பொழுது போகாதபோது என் விளையாட்டுக் கருவியாக இருக்கும் வாண்டுப் பயல்! அவனோடு கண்ணா மூச்சி ஆடுவதென்றால் எனக்கு ரொம்பப் பிடிக்கும். உள்ளேயிருந்து வந்தவன் ஒரு பிடி வைக்கோலைக் கொண்டு வந்து வாய் எதிரில் நீட்டினான். இந்த மடையனுக்கு ஒன்றுமே தெரியவில்லை. அவிழ்த்து விடச் சொன்னால் என்னமோ வைக்கோலை நீட்டுகிறான்! அது யாருக்கு வேண்டும்! விதி அற்ற மாடுகள்தான் அதைத் தின்னும். அது வேண்டாம் என்று தலையை ஆட்டி விட்டுக் கயிற்றை இழுத்துக் காட்டி



னேன். அவனுக்கு அது புரிய வில்லை. ''வைக்கல் வேண்டாட்டா போ!'' என்று சொல்லி விட்டுப் போய்விட்டான். என்னுடைய கோபம் மெல்ல இப்போது மனிதர்களை விட்டுக் கயிற்றின் மேல் தாவிற்று. எனக்கு வந்த கோபத்தில் கழுத்தை உலுப்பி ஒரு இழு இழுத்தேன். 'டப் டப்' ''அடேய்! என்னை விட்டு விடடா, விட்டு விடடா!'' என்று அலறிற்று தாம்புக் கயிறு. ''உன்னால்தானேடா இத்தனையும்! நீ இந்த மனிதப் பயல்களோடு சேர்ந்துகொண்டு ஏன் சதி பண்ணுகிறாய்? அதன் பலனை அநுபவி'' என்றேன் நான்.

''ரொம்பத் துள்ளாதே, அப்பா! இந்தத் தாம்பன் போனால் இன்னொரு தும்பன் வருவான். அவனிடம் உன் ஜம்பம் சாயாது; தெரியுமா?'' என்றது தாம்புக் கயிறு. எனக்குக் கோபம் அசாத்தியமாக வந்தது. என் முழு பலத்தையும் உபயோகித்து ஒரு இழுப்பு இழுத்தேன். 'டப்!' கெட்டியாக இழுத்



துப் பிடித்துக்கொண் டிருந்த தன் கடைசி மூச்சையும் டப்பென்று விட்டுத் தொலைத்தது தாம்புக் கயிறு.

விடுதலை பெற்ற மகிழ்ச்சியில் வெளியே போனேன். கொஞ்ச தூரம் போனதும் ஓர் அழகான தோட்டம் பச்சைப் பசேல் என்று இருந்தது.

அருகிலே போய் எட்டிப் பார்த்தேன். சட்! ரொம்ப மோசம்! இந்தப் பாழாய்ப்போன மனிதர்களுக்கு மூளை என்பதே கிடையாதுபோல் இருக்கிறது. இல்லாவிட்டால் இவ்வளவு அழகான தோட்டத்தை வளர்த்து விட்டு அதைச் சுற்றி முள்வேலி அடைப்பார்களா? ஆனால் இதற் கெல்லாம் நானா பயப்படுவேன்! வேலியைச் சுற்றிச் சுற்றிப் பார்த் தேன். ஒரு மூலையில் ஒரு சின்ன இடைவெளி தெரிந்தது. அதன் வழியாக நுழைந்து, தீவிரமாகச் செடிகளைத் தின்னும் வேலையில் இறங்கினேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் 'ஹை ஹை!' என்ற சத்தம் கேட் டது. நான் திரும்பிப் பார்க்கா மல் சுவாரசியமாகச் செடிகளைத் தின்றுகொண் டிருந்தேன். 'பொத்'தென்று என் முதுகில் ஒரு கல் விழுந்தது. திரும்பிப் பார்த்தால் இரண்டு மூன்று தடியர்கள் கம்போடு என்னைத் துரத்த வந்துகொண் டிருந்தார் கள். என்ன மோசமான ஜனங் கள்! இவ்வளவு கஷ்டப்பட்டு, வேலி தாண்டி வந்திருக்கிறதே என்று சந்தோஷத்துடன் வரவேற் காமல் துரத்தக் கிளம்பி விட்டார் களே! கம்புக்குப் பயந்துகொண்டு நான் ஓட ஆரம்பித்தேன். ஆனால் அதற்குள் அந்தத் தடியர்கள் ஓடி வந்து நன்றாக அடித்துவிட்டார் கள். என்னை ஒரு கயிற்றால் கட்டி எங்கேயோ ஓரிடத்தில் கொண்டு போய் அடைத்துவிட் டார்கள். அங்கே என்னைப்போல் இன்னும் பலர் வந்திருந்தனர். அவர்கள் எல்லாரும் இதே காரணத்துக்காகத்தான் அங்கே அடைபட்டிருப்பதாகச் சொன்னார் கள். நாங்கள் எல்லாரும் சேர்ந்து ஒரு மகாநாடு கூடினோம். அதில் ஒரு தீர்மானமும் கொண்டு வந்தோம். அதிலே முக்கியமான அம்சம், 'கன்றுக்குட்டிகளை எக்காரணம் கொண்டும் கட்டிப் போடக்கூடாது. எந்த இடத்தி லும் சர்வ சுதந்தரமாகப் போக விட வேண்டும். பயிர் செய்பவர் கள் வேலி அடைக்கக்கூடாது. பயிரை மேயும் மாடுகளை அடிக் கவோ பிடிக்கவோ கூடாது. இந்த சுதந்தரம் மிக மிக அவசரமானது. அவசியமானதுங்கூட. இந்தச் சுதந் தரம் கிடைக்கவில்லை யென்றால் கன்றுக்குட்டிகள் எல்லாம் சாப் பிடும் நேரத்தைத் தவிர மற்ற நேரம் எல்லாம் உண்ணாவிரதம் இருக்கும்.'-இந்தத் தீர்மானத்தை ஆதரித்து நான் ஆவேசமாகப் பேசிக்கொண் டிருந்தேன். அப் போது சுண்டுப் பயலின் அப்பா வும் இன்னொரு மனிதனும் வந்த னர். சுண்டுவின் தகப்பனார் அந்த இன்னொரு மனிதரிடம் கொஞ்சம் பணம் கொடுத்தார். பணத்தை வாங்கிக் கொண்டவர் என்னை அவிழ்த்து, சுண்டுவின் தகப்பனாரி டம் கொடுத்தார். அவர் என்னை வீட்டிற்கு அழைத்து வந்தார்.

வீட்டிற்கு வந்ததும் சுண்டு ஓட்டமாக ஓடி வந்து என்னைக் கட்டிக்கொண்டான். அவன் தகப்பனார், "டேய் சுண்டு! இந்த அறுந்த தாம்புக் கயிற்றால் கட்டினால் அப்படித்தான் 'கழுதை' ஓடிப்போகும். கொண்டா, அந்தப் புதுத் தும்பை!" என்றார். நான் பரிதாபமாகத் தும்பைப் பார்த்து விழித்தேன். "என்ன அப்பா, பார்க்கறே! அந்தத் தாம்புக் கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடினது போல் ஓடலாமென்றா? இந்தத் தும்பிடம் உன் ஜம்ப மெல்லாம் சாயாது அப்பா, சாயாது!" என்று சிரித்தது அந்தத் திமிர் பிடித்த தும்பு. 'சுதந்தர மாக அறுத்துக்கொண்டு ஓடிப் போய்த் தடியடி வாங்கியது போதும். இங்கே கட்டுண்டு கிடப் பதே சுகம் என்று சும்மா இருந்து விட்டேன். இப்போதுகூட நினைத் தால் அந்த அடியின் வேதனை என்னை வாட்டுகிறது.

# ஆக்ராவில் பீர்பால்

'உஷா'

ஈரானிய இளமங்கையும், பாரத எழில் நங்கையும் நடனமாடிக்கொண் டிருந்தார்கள்.

அக்பர் பாதுஷாவின் கொலு மண்டபம் நிறைந்திருந்தது. இந்திய, ஈரானிய சிற்பக் கலைக்கே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கியது அந்த மண்டபம்.

மேடையில் இரு நாட்டியக்காரிகளும் மாறிமாறி, தங்கள் திறமையைக் காட்டிக்கொண் டிருந்தனர். ஒரு புறம் சிதாரின் மெல்லிசையும் தபலாவின் தாளமும் இயங்க, மற்றொரு புறம் வீணையின் மதுரநாதம் மிருதங்கத்தின் தாளக்கட்டுடன் இழைந்து ஒலித்தது.

தர்பாரில் வீற்றிருந்தோர் தங்களை மறந்த நிலையில் அமர்ந்திருந்தனர்.

மெல்ல மெல்ல இருவித இசைக் கருவிகளும் இரு நாட்டியக்காரிகளின் சிலம்பணிந்த பாதங்களும் ஒரே கதியில் இயங்கின. வெவ்வேறான இரு இசைகள், இரு கலைகள் இரண்டறக் கலந்து, சுழன்று சுழன்று வந்தன. தேனில் இனிப்பைப்போல், மதுவில் போதை போல் இசையும் நடனமும் காண்போரை வெறிகொள்ளச் செய்தன.

அக்பரின் விழிகளில் மகிழ்ச்சியின் ரேகைகள் பளிச்சிட்டன. அவர் கண்ட கனவே இதுதானே? ஹிந்துவும், முஸ்லீமும் இழைந்து இணைந்து, இன்னிசை பரப்புவதையே தன் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர் அன்றோ அக்பர் பாதுஷா!

கூடி நின்று யாவரும் மகிழ்ச்சி வெள்ளத்திலே திளைத்துக்கொண் டிருக்கும் சமயத்தில், ஓர் உருவம் மட்டும் ஏனோ பெருமூச் செறிந்த வண்ணம் கவலையே உருவாக அமர்ந்திருந்ததைக் காண பாதுஷாவின் கண்கள் தவறவில்லை.

பாதுஷாவின் கம்பீரமான குரல் திடீர் என அமைதியைக் கலைத்தது.

''மௌல்வி சாகப், யாவரும் மகிழ்ந்திருக்கும் இத்தருணத்தில், பெருமூச்சு ஏன்?''

இசை அடங்கிவிட்டது. பாதுஷாவின் குரல் ஒலித்ததும் யாவரின் கவனமும் மௌல்வியின்பால் திரும்பியது. மௌல்வி எழுந்து நின்று வணங்கினார். அடக்கமான குரலில், ''ஆலம்பனாஹ், மனம் நிம்மதி இழந்திருக்கிறது. எவ்வளவு யோசித்துப் பார்த்தாலும் ஒன்றும் புரியவில்லை. சிக்கலான வழக்கொன்றில் தீர்ப்புக் காண வழி தெரியவில்லை, ஷாஇன்ஷா!''

''அவ்வழக்கை தர்பாரில் ஆஜர் செய்யலாம்!''

பாதுஷாவின் உத்தரவு பெற்ற மறுகணம் சபையின் முன்னால் மூவர் வந்து நின்றனர். ஆடவர்கள் இருவர்; பெண்ணொருத்தி.

மௌல்வி கூறினார்:

''ஷா-இன்-ஷா, இந்தப் பெண் தனக்குத்தான் உரியவள் என்பது இவ்விருவருடைய வாதம். விவாகத்திற்குப்பின் இந்தப் பெண் முதன் முதலாகப் புக்ககம் செல்லுகிறாள். அவளால் தன் கணவனை அடையாளம் கண்டு கொள்ள இயலவில்லை. இப்பொழுது நம் முன் உள்ள பிரச்னை, இந்தப் பெண்ணை இவ்விருவரில் யாரிடம் ஒப்படைப்பது என்பதுதான்.''

மௌல்வி இதைக் கூறி முடித்ததும் அவ்விரு ஆடவர்களில் சற்று இளைஞனாகத் தோற்றமளித்தவன் பாதுஷாவை வணங்கிக் கூறினான்: ''ஏழைகளின் ரக்ஷகரே, நான்தான் இந்தப் பெண்ணின் கணவன். யமுனையைக் கடந்து செல்ல மனைவியுடன் படகில் ஏறி அமர்ந்து கொண்டேன். இந்தத் துஷ்டன் திடீர் என என்னருகில் வந்தமர்ந்தான். என் மனைவியை உற்றுப் பார்த்துக்கொண்டே யிருந்தான். கரையை அடைந்து நான் கீழே இறங்கியதும், இவன், என் மனைவியின் கரத்தைப் பற்றிக்கொண்டு 'இவள் என் மனைவி' என்று வாதாடுகிறான், பிரபோ..''

''இது பொய், மகாராஜா!''

என இடைமறித்தான் மற்றவன். இவன் சற்றுப் பெரியவனுகவும் இருந்தான். முன்னவனைப்போல் கிராமத்தானுகவுமில்லை.

''ஹுஜூர்..இவள் என் மனைவி தான். இவளை அபகரித்துக் கொள்ளப் பார்க்கிருன் இவன்!''

இரண்டாமவனின் பேச்சிலிருந்த விஷயமும் குரலிலிருந்த துக்கமும் சபையினரைச் சிந்தனையில் ஆழ்த்தியது. இவனுடைய கூற்றுத்தான் உண்மையோ என அவர்கள் சந்தேகித்தனர்.

அக்பர் பாதுஷாவிற்கு என்றுமே இவ்விதச் சிக்கலான விஷயங்களில் தீர்வு காண்பதில் உற்சாகமதிகம்.

சபையில் அறிவாளிகளும் பண்டிதர்களும் கவிகளும், கலைஞர்களும் சிந்தனையில் ஆழ்ந்தனர்.

இதே சமயம்..

விண்ணை அளாவி நின்ற அரண்மனையின் ஆசார வாசலிலே பீமனைப் போல் நின்ற நெடிய உருவத்திடம் உள்ளே நுழைய அனுமதி கேட்டுக் கொண்டிருந்தவன் மகேஷ் பண்டிதரான அந்த கால்பி அந்தணர் தான்.

வீட்டை விட்டுக் கிளம்பிய அவசரத்தில் மகேஷ் பண்டிதர் முத்திரை மோதிரத்தை எடுத்து வர மறந்துவிட்டார். மோதிரம் இல்லாதது மட்டுமல்ல, அவருடைய அந்தக் கோலமும் உள்ளே விட மறுத்ததற்கு ஓரளவு காரணமாகும்.




யோசனையில் ஆழ்ந்திருந்த பண்டிதரின் முகம் பிரகாசமடைந்தது. பனைமரம்போல் நின்ற அந்தக் காவலாளியின் காதருகே எழும்பிக்

குதித்து, ''தர்பாரில் கிடைப்பதில்....சரி பாதிப் பங்கு தந்து விடுகிறேன். என்ன, சரிதானே?'' என்றார்.

காவற்காரனின் முகம் மாறியது.

''பாதியா? உண்மையாகவா?''

''ஆம்; உண்மையாகத்தான்!''

தர்பாரில் இன்னமும் வழக்குக்குத் தீர்வு காணப்படவில்லை. யாவரும் தங்கள் தங்கள் மூளையைத் துருவி ஆராய்ந்துகொண் டிருந்தனர்.

அமைதி நிலவியிருந்த அந்தச் சபையில் அக்பரின் குரல் உரக்க ஒலித்தது. ''அறிவாளிகள் நிறைந்த இந்தச் சபையில் உடனே தீர்ப்புக் காண உங்களில் ஒருவருக்கும் வழி தோன்றவில்லையா?''

சபையே அதிர்ந்தது. ஒருவரும் வாய் திறக்கத் துணிவற்று மௌனமாக வீற்றிருந்தனர். தூரத்திலிருந்து ஒரு குரல், ''பாதுஷா உத்திரவிட்டால்..''

யாவரும் திடுக்கிட்டனர். பாதுஷா உற்சாகத்துடன் கூறினார். ''சபாஷ்..வா..முன்னே வா..''

முன்னே வந்த உருவத்தைக் கண்டதும் பாதுஷாவின் விழிகளில் வியப்புப் பளிச்சிட்டது.

யாவரும் மெலிந்த அந்த உருவத்தை நோக்கினர். மகேஷ் பண்டிதர்தான் அவர்!

''ஹுஜூர்....ஒரு கொலையாளியை வரவழைக்க உத்தரவிடுங்கள்!....''

மறுநிமிடம் ஒரு கொலையாளி மகேஷின் முன் நின்றான். எல்லோருடைய மனமும் ஆவலால் நிறைந்தது. மகேஷ் கொலையாளியை உடன் அழைத்துக்கொண்டு அவ்விரு ஆடவரையும் நோக்கிச் சென்றார்.

''இருவரும் சுவரைப் பார்த்துக் கொண்டு நில்லுங்கள்!'' அவர்கள் சுவரை நோக்கித் திரும்பி நின்றனர். பாதுஷாவின் கரங்கள் மீசையைத் தடவி விட்டன. கொலையாளியின் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டு, மகேஷ் உரத்த குரலில் சத்தமிட்டார்.

''என்ன பார்க்கிறாய்? சீவி விடு, அந்த அயோக்கியனின் தலையை!''

சற்று வயதான அந்த மனிதன் 'சடக்'கெனப் பயத்துடன் திரும்பிப் பார்த்தான். ஆனால் இளைஞனான அந்தக் கிராமத்தானோ அசைவற்று நின்றான்.



மகேஷ் பாய்ந்து சென்ருர். வயதான அந்த ஆடவனின் கரத்தைப் பற்றி இழுத்துவந்து பாதுஷாவின் முன் நிறுத்தி, ''ஷா இன் ஷா! இதோ, உண்மைக் குற்றவாளி!'' என்ருர்.

''சபாஷ்! . . பண்டிதரே. . சபாஷ்! சிறைக்குக் கொண்டு போங்கள், இந்த அயோக்கியத் தடியனை. மற்ற இருவரையும் பத்திரமாக ஊருக்கு அனுப்புங்கள். பண்டிதரே, நீர் இன்று நம் சபையின் கௌரவத்தைக் காப்பாற்றி விட்டீர்! கேளுங்கள்; உமக்கு என்ன வேண்டும்?''

''ஷா இன் ஷா . . தற்சமயம் ஐம்பது கசையடி கொடுத்தால் போதும்.''

சபையினர் திடுக்கிட்டனர். பாதுஷா மகேஷ் பண்டிதரின் உள்ளத்தை ஆராய விரும்பினுர். மகேஷை நோக்கி, ''பண்டிதரே! உமது விருப்பம் பூர்த்தி செய்யப்படும். இந்த வேண்டுகோளின் காரணம்?'' என்ருர்.

''ஹுஜூர்! அரண்மனைப் பிரதான வாயில் காவலாளிக்கும் இந்தப் பரிசில் சரி பாதிப் பங்கு உண்டு.''

பாதுஷாவுக்கு விஷயம் தெளிவாக விளங்கிவிட்டது. அந்தக் காவலாளிக்கு இருபத்தைந்து கசையடிகள் கொடுக்கப்பட்டன.

''மந்திரி! மீதி இருபத்தைந்தையும் இவர் பெயரில் கஜானுவில் சேர்த்துவிடுங்கள். சமயம் வரும்போது வட்டியுடன் தரலாம்'' என்ருர் பாதுஷா.

பின்னர் மகேஷை நோக்கி, ''பண்டிதரே, தாங்கள் ஆக்ராவிற்கு வந்திருப்பதின் காரணம் என்ன?'' என்று வினவினுர்.

''வயிறுதான், பிரபோ!''

''என்ன வேலை செய்வீர்?''

''உத்தரவு எதுவானுலும் . .''

''புதிர் விடுவிப்பீரா?''

பாதுஷா தன் இடதுபுறம் அமர்ந்திருந்த பண்டிதர்களில் ஒருவரை நோக்கினுர்.

''பண்டித தேவிமிச்ரரே. . . . நேற்று நீர் கேட்ட கேள்வியைக் கேளுங்கள்!''

தேவிமிச்ரர் கேட்டார்: ''கடலில் அடங்காதது எது? தீயினுல் கருகாதது எது? காலம் அழிக்காதது எது?''

மகேஷ் பதில் கூறினுர்:

''மனம் கடலில் அடங்காது. தர்மம் தீயில் கருகாது. கீர்த்தியைக் காலம் அழிக்காது.''

சபையினர் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர். மகேஷின் திறமையும், அறிவும் அவர்களை வியப்பிலாழ்த்தியது.

தர்பார் கலைந்தது. பாதுஷா, மகேஷ் பண்டிதரையும் தம்முடன் அழைத்துக்கொண்டு அரண்மனைக்குள் சென்ருர். உடைகளைக் களைந்தவாறே பாதுஷா வினவினுர்.

''பண்டிதரே. . . . உண்மைக்கும், பொய்க்கும் எவ்வளவு தூரம்?''

''அரசே! நாலு விரல்களுக்கிடையே உள்ளே தூரந்தான்?''

''அதெப்படி?''

''மகாராஜா, கண்களுக்கும், காதுகளுக்குமிடையே நாலு விரல் தூரந்தானே உள்ளது? நாம் கண்ணுல் பார்ப்பது மெய். காதால் கேட்பது பொய்.''

''பண்டிதரே, சரியாகச் சொன்னீர். உம்மை மெச்சினேன். உமது பெயர் இனி பீர்பால்; நம்முடைய அரச அவைப் புலவர்களில் நீரும் ஒருவர்.

மகேஷ் பண்டிதருக்கு உடம்பெல்லாம் புல்லரித்தது.

அன்றிரவு பட்டமகிஷி ஜோதிபாய் கேட்டாள். ''மகாராஜா! தாங்கள் அவர் பெயரைக்கூட மாற்றிவிட்டீர்களே! அது ஏன்''

''அவரிடம் கூர்மையான புத்தியிருக்கிறது. கூர்வாளும் பயனற்றுப் போகும் போது நுண்ணறிவு, வெற்றி காணமுடியும். இதனுல்தான் இந்த மகேஷ் பண்டிதருக்கு, பீர்பால் . . வீரர்களுக்கெல்லாம் வீரன், மாபெரும் வீரன் என்ற பெயரை அளித்துவிட்டேன்.''

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE M. L. J. PRESS PRIVATE LTD., MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# கண்ணன் கழக அங்கத்தினர்கள்

A. 1. எம். அண்ணாமலை, சென்னை - 1; 2. அ. ஆவுடைநாயகம், சென்னை - 15; 3. எஸ். ஆரோக்கியசாமி, கிருஷ்ணகிரி; 4. வெ. ஆறுமுகம், திருமையம்; 5. அல்போன்ஸ், பாண்டிச்சேரி; 6. எம். அப்துல் ஜலீல், குறிஞ்சிப்பாடி; 7. ஏ. ஆர். அகமது ஷரீப், சிதம்பரம்;

B. 1. பி. பாலன், செம்பனார்கோயில்; 2. சீ. பாலசுப்பிரமணியன், காட்பாடி; 3. எம். பஷீர், கடையநல்லூர்; 4. கா. அ. பஷீர் அகமது, காங்கயம்; 5. ஜி. பாஷா, திருவண்ணாமலை; 6. ஏ. எஸ். பாலசுப்பிரமணியம், அநுமந்தன்பட்டி; 7. கே. பாலசுப்பிரமணியன், சென்னை - 17; 8. டி. ஏ. பாலசுப்பிரமணியன், திருச்செங்கோடு; 9. வி. பாஸ்கரன், ஜயங்கொண்டசோழபுரம்; 10. ஏ. பூபதி, மதுக்கரை;

C. 1. வி. சந்திரசேகரன், திருப்பாதிரிப்புலியூர்; 2. கே. வி. சந்திரசேகரன், மேலக் குமாரமங்கலம்; 3. அ. சந்திரசேகரன், வாணியம்பாடி; 4. எம். சந்திரன், திருப்பாதிரிப்புலியூர்;

D. 1. கே. தேவராஜன், காரமடை; 2. சி. எம். தேவராஜன், ஒண்டிப்புதூர்; 3. கி. தக்ஷிணாமூர்த்தி, திருக்கோயிலூர்; 4. எஸ். துரைராஜ், ஆடுதுறை; 5. ஆ. துரைக்கண்ணு, பீளமேடு;

G. 1. எம். எஸ். கோபாலகிருஷ்ணன், ஈரோடு; 2. கிளையிட்டன் ராஜ், தூத்துக்குடி; 3. எம். கணேசன், செட்டிக்குறிச்சி; 4. ஆர். கோபிநாதன், ஆத்தூர்; 5. பி. எஸ். குருமூர்த்தி, மாயூரம்; 6. கி. கோபாலன், விழுப்புரம்; 7. எல். கோபால கிருஷ்ணன், காரைக்குடி;

H. 1. ஆர். ஹேமலதா, திருச்சிராப்பள்ளி;

J. 1. அ ஜயராமன், ஈரோடு; 2. க. நா. மு. ஜியாவுதீன், கூத்தாநல்லூர்; 3. என். வி. ஜயராமன், கல்கத்தா - 26; 4. ஆர். எம். ஜக்ரியா, குடவாசல்;

K. 1. மு. கிருஷ்ணப்பிள்ளை, திருமலை, இலங்கை; 2. டி. பி. எஸ். கிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம்; 3. ரா. கறுப்பையா, தேவாரம்; 4. செ. கறுப்பண்ணன், ஈரோடு; 5. எஸ். கே. குமார், சென்னை - 17; 6. ஜி. குப்புசாமி, திருக்கோயிலூர்; 7. தி. வெ. கமலா, ஈரோடு; 8. எஸ். காதிர் ஹுசைன், சோழமாதேவி; 9. என். கண்ணன், மாயூரம்; 10. எம் ஆர். கிருஷ்ணன், சென்னை - 20; 11. வெ. கண்ணன், மாயூரம்; 12. டி. கண்ணன், மாறமங்கலம்; 13. கு. பா. குமாரசாமி, குமாரலிங்கபுரம்;

M. 1. ந. மகேசுவரி, சிங்கப்பூர், மலாயா; 2. வி. ஆர். முருகன், திருப்பத்தூர், வ.ஆ; 3. எம். மேரி, பாண்டிச்சேரி; 4. வி. மோகன், மண்டபம் காம்பு; 5. அ. முத்துலட்சுமி, விருதுநகர்; 6. எஸ். ஆர். முரளி, பெருங்காட்டூர்; 7. முகமது இஸ்ஹாக், ஆயப்பாடி; 8. ஆர். மகாதேவன், சென்னை - 17; 9. என். முருகேசன், மதுரை; 10. குவின். மாறன், எழிஞ்சுக்குப்பம்; 11. பி. முருகப்பா, பீளமேடு; 12. இரா. மணி, உறையூர்; 13. வி. பி. மணி, தர்மபுரி;

N- 1. பி. நடராஜன், புதுடில்லி - 3; 2. கே. நடராஜன், ஆம்பூர்; 3. எம். நடராஜன், கோவை—1; 4. ஸி. ஏ. நஜீர் அகமது, கோவை; 5. ஆர். எஸ். நாதன், தஞ்சாவூர்; 6. ஆர். எல். நரசிம்மன், பம்பாய்; 7. பி. ஆர். நாகப்பன், திருச்சி; 8. ஏ. நஜீர் அலி, நெல்லிக்குப்பம்; 9. எம். நஞ்சப்பன், ஒண்டிப்புதூர்; 10. வி. நாராயணன், கோயம்புத்தூர்;

R. 1. வி. ராமாநுஜம், ராமநாதபுரம்; 2. ந. ரங்க பிரசாத், ஆத்தூர்; 3. கே. ரஞ்சன், ஸ்ரீபெரும்புதூர்; 4. பி. ராஜேந்திரன், பாவாலி; 5. சு. ராமசுவாமி, பெரமனூர்; 6. டி. ராஜலட்சுமி, சென்னை - 5; 7. ஜி. ரமணி, ஒரத்தநாடு! 8. எஸ். பி. ரமேஷ். சென்னை - 7; 9. பி. எச். ரமணன், கடயம்;

(Regd as a Newspaper in Ceylon) **Regd. No. M 5542**




## கண்ணன்

# விடுமுறைக் கால போட்டிகள்

இதோ ஒரு புதிய போட்டி: இதில் ஐந்து வயது முதல் பதினாறு வயது அடைந்தவர்கள் வரையில் கலந்துகொள்ளலாம். கதை, கட்டுரை, கவிதை, சித்திரம் என்று நாலு வகையாக இந்தப் போட்டியைப் பிரித்திருக்கிறோம். ஒவ்வொரு வகைக்கும் முதல் பரிசு, இரண்டாம் பரிசு என்று உண்டு. வயதுவாரியாகப் பிரித்து இந்தப் பரிசுகளைத் தர எண்ணியுள்ளோம். 5 வயது முதல் 8 வயது வரையில் ஒரு பிரிவு; 9 வயது முதல் 12 வயது வரையில் ஒரு பிரிவு; 13 வயது முதல் 16 வயது வரையில் ஒரு பிரிவு. இதன்படி, கதைப் போட்டி என்றால் வயதுக் கிரமமாக மூன்று முதற் பரிசுகள் பெறலாம். அப்படியே கவிதை, கட்டுரை, சித்திரம் ஆகிய போட்டிகளுக்கும் தனித்தனியே மூன்று முதல் பரிசுகள் உண்டு. உங்களுக்கு எதில் திறமையிருக்கிறதோ அந்தப் போட்டியில் கலந்துகொள்ளலாம். எல்லாவற்றிலும் திறமையிருந்தால் எல்லாவற்றிலும் கலந்துகொள்ளலாம்.

## முக்கிய நிபந்தனைகள்:

1. இந்தப் போட்டியில் கண்ணன் கழக அங்கத்தினர்களே கலந்துகொள்ளலாம். போட்டியில் சேருபவர்கள் இந்த ஆண்டு மே, ஜூன் மாத இதழ்களில் வெளியாகியுள்ள மூன்று கூப்பன்களைப் பூர்த்தி செய்து அனுப்பவேண்டும். கண்ணனில் இந்த அங்கத்தினர் கூப்பன் வெளியாகும்.

2. ஒரே பக்கத்தில் தெளிவாக இடம் விட்டு, மசியால் எழுத வேண்டும். உறைகளின் மேலே கண்ணன் கதைப் போட்டி அல்லது கவிதைப் போட்டி அல்லது சித்திரப் போட்டி அல்லது கட்டுரைப் போட்டி என்று எந்த வகைப் போட்டியில் கலந்துகொள்கிறீர்களோ அதைக் குறிப்பிடவேண்டும்.

3. உங்கள் அங்கத்தினர் எண், வயது, வீட்டு முகவரி முதலியவற்றைக் கூப்பனில் எழுதுவதோடு, நீங்கள் எழுதும் பக்கத்தின் தலைப்பிலும் குறிப்பிடவேண்டும்.

4. நீங்கள் எழுதுவது உங்களுடைய சொந்தக் கற்பனையாக இருக்கவேண்டும்.

5, மற்ற நிபந்தனைகள் வழக்கம்போலத்தான். இந்தப் போட்களின் முடிவுத் தேதி 31-7-'58.

கண்ணன காரியாலயம், மயிலாப்பூர், சென்னை-4.